6 வார, வீட்டுப்பாடமற்ற வேத பாடம்

7 இலட்சத்திற்கும் மேலான பிரதிகள் விற்பனையில்

# மெய்யான ஆராதனையின்

# வாழ்க்கை வாழ்தல்



கே ஆர்தர் , பாப் & டையன் வெரீன்

பிரிசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்தியா

40 நிமிட
வேத பாடங்கள்

40 நிமிட

வேத பாடங்கள்

6 வார
வேதாகம
நிகழ்வு

# மெய்யான ஆராதனையின் வாழ்க்கை வாழ்தல்

ப்ரிசெப்ட் மினிஸ்ட்ரீஸ்
சொஸைட்டி ஆப்
இந்தியா

கே ஆர்தர்
பாப் & டையன் வெரீன்

LIVING A LIFE OF TRUE WORSHIP (Tamil)

*Published by*
PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA
Post Box 8474, Mumbai - 400 103
Phone: (022) 28920426, 28931976
E-mail: preceptindia@rediffmail.com
Web: www.preceptindia.info

*With Permission From*
WATERBROOK PRESS
2375 Telstar Drive, Suite 160
Colorado Springs, Colorado 80921, USA

First Edition: April 2013

ISBN 1-57856-480-8

Copyright © 2009 by Precept Ministries International

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying and recording, or by any information storage and retrieval system, without permission in writing from the publisher.

*Printed at*
**Ebenezer Printing House,**
Dadar, Mumbai 400028.
Tel: (022) 2446 2632 / 3872
E-mail: outworkeph@gmail.com

# ப்ரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்திய

*மக்களை தேவனின் வார்த்தையில் நிலைநாட்டுதல்*

ப்ரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்தியா ( PMSI) என்பது ப்ரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் இன்டர்நேஷனலின் ஒரு அங்கமாகும். வேதாகமத்தை ஆழமாக கற்பதின் மூலம் மக்களை தேவனின் வார்த்தையில் நிலைநாட்டுவதில் இது ஈடுபட்டுள்ளது.

## தரிசனம்

பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மக்கள் இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் மாதிரிகளாகவும்,வேதாகமத்தை ஆழமாக கற்பவர்களாகவும், வேதாகமக் கண்ணோட்டத்தில் உலகத்தை நோக்குகிறவர்களாகவும், திருச்சபைக்கு உண்மையாக ஊழியம் செய்பவர்களாகவும் வாழுதல்.

## குறிக்கோள்

தேவனுக்கு கனம் உண்டுபண்ணும் வகையில் மக்களை தேவனுடைய வார்த்தையில் நிலைநாட்டுவது.

Address
**Precept Ministries Society of India**
Post Box 8474, Mumbai 400 103
Telephone: (022) 28920426 / 2893 1976
preceptindia@rediffmail.com
www.preceptindia.info

## இந்த கற்கும் முறையை பயன்படுத்துவது எப்படி?

வேதம் கூறுவதை சுயமாகக் கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள ஆனால் ஒன்றுகூடிவர மிகவும் குறைவான நேரமே உள்ள மக்களுக்கு இந்த சிறு-குழு கற்றல் முறை மிகவும் ஏற்றது. உதாரணத்திற்கு, வேலையில் மதிய உணவு இடைவெளியில் கூடும் குழுக்கள்,அதிகாலைநேர ஆண்கள் கூடுகை,பெண்கள் வீட்டு ஜெபக்குழு கூடுகை, ஞாயிறு பள்ளி வகுப்பு,மற்றும் குடும்ப தியானவேளையில் பயன்படுத்த இது ஏற்றது. (மேலும நீண்ட நேரம் செலவிடும் சிறு குழுக்களுக்கும் - அதாவது மாலைநேர குழுக்கள், சனிக்கிழமை குழுக்கள் - ஜெபிக்கவும், ஐக்கியத்திற்கும் மற்ற நிகழ்ச்சிகளோடு,வேத பாடத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கும் குழுக்களுக்கும் இந்தமுறைமை ஏற்றது.)

குழுவிலுள்ள அனைத்து அங்கத்தினர்களும் கூடிவரும்போதே ஒவ்வொரு பாடத்தினுடைய கற்றல் செயல்முறைகளையும் ஒரேநேரத்தில் முடிக்கும்படி இந்தப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு குழுவாக கற்கும் முறையாக இருந்தாலும், கற்கவும் விவாதத்தை நடத்திச்செல்லவும், உங்களை வழிநடத்த ஒரு உதவியாளர் தேவைப்படுகிறார். (இவரின் செயல்பாடு விரிவுரையாற்றுவதோ, போதிப்பதோ அல்ல. எனினும், இந்த புத்தகம் ஞாயிறு பள்ளி வகுப்பு மற்றும் அதைப்போல செயல்படும் குழுக்களில் பயன்படுத்தப்படும்போது, போதிப்பவர் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வார பாடத்தோடு தன் உட்கருத்துக்களையும் நேரடியாகப்போதிக்கலாம்).

நீங்கள், உங்கள் குழுவின் உதவியாளராக, தலைவராக இருப்பின், உங்கள் வேலையை எளிதாக்க உதவிடும் சில குறிப்புகள்:

- நீங்கள் உங்கள் குழுவை நடத்தும் முன்பதாக பாடத்தை வாசித்து அதில் அடையாளமிடவும். இது பாடத்துடன் நன்கு அறிமுகமாக்கிக்கொள்ள உதவுவதோடு, மிக எளிமையாக குழுவை நடத்த உதவும். புத்தகத்தில் சொல்லப்பட்டபடி அடையாளக்குறியீடுகளை இடுவது குழுவை நடத்திச்செல்ல எளிதாக்கும். நீங்கள் குழுத்தலைவராயின் ஒவ்வொரு குறியீட்டுக்கும் ஒரு குறிப்பிட்ட வண்ணத்தை தேர்ந்தெடுக்கவும்.

- நீங்கள் குழுவை நடத்தும்போது, பாடப்பகுதியின் ஆரம்பத்திலிருந்தே அதிலுள்ளதை சத்தமாக வாசியுங்கள். பாடத்தின் முன்பு அல்லது பின்பு அல்லது இடையில் வரும் “உட்கருத்துக்களையும்”(insight box)பாடத்துடன் சேர்த்து வாசியுங்கள். நீங்கள் இணைந்து உற்றுநோக்கி, கற்றுக்கொண்டதை விவாதியுங்கள். வேத வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, குழுவினர் அடையாளமிடும் வார்த்தையை சத்தமாக சொல்லச்சொல்லுங்கள்.

| Vi | இந்த கற்கும் முறையை பயன்படுத்துவது எப்படி? |
|---|---|

• கலந்துரையாடல் கேள்விகள் முழு பாடத்தையும் படித்து முடிப்பதற்கே கொடுக்கப்பட்டுள்ளது. வகுப்பு விவாதத்திற்குள் கடந்து செல்லும்போது, அநேக வேளைகளில், அவர்களே கேள்விகளை புரிந்துகொண்டு விவாதிப்பார்கள். நினைவில்கொள்ளுங்கள்,கலந்துரையாடல் கேள்விகள் குழுவை தலைப்பை நோக்கி நடத்திச்செல்லவே கேட்கப்படுகிறது,கலந்துரையாடலை முடிவுக்கு கொண்டுவர அல்ல.

• ஒவ்வொருவரும் தங்கள் பதில்களையும், கண்டுபிடிப்புகளையும் வாய்மொழியாக சொல்வது முக்கியமானது என்று நினைவில்கொள்ளுங்கள். இது அவர்களின் தனிப்பட்ட புரிந்துகொள்ளுதலை மிகவும் வலிமையாக்குகிறது. ஒவ்வொரு வார பாடத்தின் விவாதத்திலும் ஒவ்வொருவருக்கும் பங்குபெறும்படி போதுமான அளவு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.

• கலந்துரையாடல் நகர்ந்து செல்லட்டும். கற்கும்போது அவசியமான இடங்களில் சற்று நேரம் அதிகமாக செலவழிக்கலாம் என்பதே இதன் பொருள். தேவைப்பட்டால், பாடத்தை ஒரு கூட்டத்தொடருக்கும் மேலாக தொடர்ந்து எடுத்துக்கொண்டுசெல்லலாம். எனினும், செல்லும் வேக அளவை மிகவும் குறைத்துவிட வேண்டாம் என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஏனெனில் உற்சாகம் குறைவதால் மக்கள் விட்டுவிடுகின்ற பகுதியில் நேரம் செலவிடப்படுவதைவிட,குழுவினர் எல்லாரும் "அதிகமாக விரும்பும்" பகுதிக்கு கொண்டுசெல்வதே நல்லது.

• சில பதில்கள் தகுதியானதும், சரியானதுமா என்பது கேள்விக்குரியதாயிருப்பின், நீங்கள் மென்மையாகவும் மகிழ்ச்சியுடனும் குழுவினருக்கு வேதவாக்கியங்களின் சத்தியத்திற்கு நேராகவே கவனம் இருக்கும்படி நினைவுபடுத்துங்கள். உங்கள் முக்கிய நோக்கம் வேதம் என்ன சொல்கிறது என்பதை கற்றுக்கொள்வதே, மனித தத்துவங்களோடு ஒன்றிப்போவது அல்ல. உண்மையில் வேத வாக்கியங்களை வாசித்து, ஒவ்வொருவருக்கும் அவருடைய பதிலை காட்டும்படி தேவனைக் கேளுங்கள்.

# மெய்யான ஆராதனையின் வாழ்க்கை வாழ்தல்

எங்கும் ஆவிக்குரிய காரியங்களுக்கான ஒரு பசி, தாகம் காணப்படுகிறது. மனிதன் ஆராதனை செய்ய படைக்கப்பட்டான். தனக்கு சரியாகப்படுவதை ஒரு மனிதன் ஆராதிப்பது தவறா? ஆனால் யாரை அல்லது எதை? சரியானதும் மறுபக்கம் தவறானதுமான ஆராதனை முறைகள் உண்டா? தேவனுடன் ஒரு சரியான, ஆழமான உறவை வளர்த்துக்கொள்ள உதவிடும் வழிமுறைகள் ஏதாகிலும்உண்டா?

மேற்கண்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்விதமாக, ஆராதனை என்ற கருப்பொருளைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது என்பதை ஆராய்ந்து அறியப்போகிறோம். நாம் ஒரு பகுத்தாயும் முறையை பயன்படுத்தப்போகிறோம், அதாவது நீங்களாகவே தேவனுடைய வார்த்தையை உற்றுநோக்கப்போகிறீர்கள். தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது, எந்த அர்த்தத்தில் சொல்லுகிறது என்று கண்ட பிறகு, இந்த சத்தியத்திற்கேற்ப உங்கள் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக்கொள்வதைக் குறித்து நீங்களே தீர்மானிக்கலாம்.

## வாரம் ஒன்று

### உற்றுநோக்கு

வேதாகமத்தில் "ஆராதனை"(தொழுதல்) என்ற சொல் முதல் முதலாக ஆதியாகமம் 22 ம் அதிகாரத்தில் தோன்றுகிறது. இந்த அதிகாரத்தில் 'தொழுதல்' என்ற சொல் ஒருமுறைதான் தோன்றுகிறது. ஆனால், உண்மையான ஆராதனைக்கான அஸ்திபாரமான அடிப்படை உண்மைகளை இதில் நாம் கற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் :** ஆதியாகமம் 22: 1-10 வரை சத்தமாக வாசிக்கவும், அதிலே "தேவன்" என்ற வார்த்தை வரும்போது அனைவரையும் சத்தமாக 'தேவன்' என்று வாசிக்கச்சொல்லவும்.

- தேவன் என்ற வார்த்தையைச் சுற்றி ஒரு △ முக்கோணம் வரையச் சொல்லவும். (அதனுடன் அவரைக்குறிக்கும் எல்லா பிரதிப்பெயர்களும் சேர்க்கவும்)
- 'தொழுதல்' என்ற சொல்லை  இவ்வாறு குறிக்கவும்

### உட்கருத்து

ஆராதனையின் எபிரேயச்சொல் **"ஷாக்கா"**. அதற்கு அர்த்தம் சாஷ்டாங்கமாய் பணிவது அல்லது தாழக்குனிவது. பழைய ஏற்பாட்டிலே, தேவனுக்கு முன்பாக வந்து கனம் செலுத்துவதற்கு இந்த சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆங்கிலத்தில் இந்த வார்த்தைக்கு ஒருவரை உயர்வாய் நோக்குவது (Worth-ship) என்பது பொருள். ஆராதனை என்பது அவர் தேவனாய் இருப்பதற்காக அவரை மதித்து கனம்செலுத்துவது என்பதாகும்.

### ஆதியாகமம் 22: 1-10

1. இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்; எப்படியெனில், அவர் அவனை நோக்கி: ஆபிரகாமே என்றார்; அவன்: இதோ அடியேன் என்றான்.
2. அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்.

3. ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்துகொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போனான்.

4. மூன்றாம் நாளில் ஆபிரகாம் தன்கண்களை ஏறெடுத்துப்பார்த்து, தூரத்திலே அந்த இடத்தைக் கண்டான்.

5. அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி: நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும்போய், தொழுதுகொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம் என்றான்.

## உற்றுநோக்கு

ஆபிரகாம் 75 வயதில் பிள்ளையில்லாமல் இருந்தபோது தேவன் அவரை பெரிய ஜாதியாக்குவேன், பூமியின் சகல ஜாதிகளும்அவரால் ஆசீர்வதிக்கப்படும் என்று கூறினார். தேவனுடைய வாக்கின்படி ஆபிரகாமின் 100வது வயதில் ஈசாக்கு பிறந்தார். ஈசாக்கின் மூலம்தான் தேவன் ஆபிரகாமிற்கு தேசத்தையும், ஜாதியையும், ஒரு வித்தையும் கொடுத்தார். கலாத்தியர் 3: 16 ன்படி அந்த வித்து இயேசு கிறிஸ்து.

## கலந்துரையாடு

·தேவன் என்று அடையாளமிட்ட வார்த்தையிலிருந்து என்ன அறிந்து கொள்கிறீர்கள்?

· தேவன் ஆபிரகாமிற்கு என்ன கட்டளை கொடுத்தார்?

## உற்றுநோக்கு

**தலைவர்:** ஆதியாகமம் 22: 1-10 வரை மறுபடியும் வாசிக்கவும். ஆபிரகாமின் பெயரைகுழுவினர் உறக்கச் சொல்லவும்,மேலும் அவர் பெயரை அல்லது பிரதிப்பெயரை வாசிக்கும்போது கோடிடவும்.

## கலந்துரையாடு

ஆபிரகாம் என்று அடையாளமிட்ட பகுதியிலிருந்து அவரைக்குறித்து என்ன அறிந்துகொள்கிறோம் என்று விவாதிக்கவும்.

- ஆபிரகாம் என்ன செய்தார்?
- தேவகட்டளைக்கு அவர் எப்படி மறுஉத்தரவு கொடுத்தார்?
- ஆபிரகாமுக்கும் தேவனுக்கும் உள்ள உறவு எப்படி இருந்தது?அவருடைய மகனோடு அவருடைய உறவு எப்படி இருந்தது?

## உற்றுநோக்கு

**தலைவர்:** ஆதியாகமம் 22: 1-10 வரை, மறுபடியும் சத்தமாக வாசிக்கவும். குழுவினர் "**தகனபலி**" என்ற சொல்லை  இவ்வாறு குறிக்கச் சொல்லவும்.

## கலந்துரையாடு

✡ வாசிக்கப்பட்ட பகுதியிலிருந்து தகனபலி என்ற வார்த்தையை குறித்து என்ன கற்றுக்கொள்கிறோம்? ஆராதனைக்கும் தகன பலிக்கும் உள்ள சம்பந்தம் என்ன?

6. ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டான்; இருவரும்கூடிப்போனார்கள்.

7. அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: என் தகப்பனே என்றான்; அதற்கு என் மகனே இதோ, இருக்கிறேன் என்றான்; அப்பொழுது அவன்: இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான்.

8. அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான். அப்புறம் இருவரும் கூடிப்போய்,

9. தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள்; அங்கே ஆபிரகாம் ஒரு பலீபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினான்.

10. பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான்.

## ஆதியாகமம் 22:11-19

11. அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன்: இதோ, அடியேன் என்றான்.

12 அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே;

## உட்கருத்து

லேவியராகமம் 1-ம் அதிகாரத்தில் தகனபலியைக்குறித்து வாசிக்கலாம். தகனபலி என்பது விரும்பி செலுத்துவதாகும். தேவனுக்கு சுகந்த வாசனையாக அக்கினியிலே எரிக்கப்படுகிறது. முழுபலியும் பலிபீடத்திலே வைக்கப்படவேண்டும். எந்த பகுதியையும் விட்டுவிடக்கூடாது. பலி செலுத்துகிறவன் தன் கையை அந்த பலியின் தலையின்மேல் வைத்தால், அது பாவநிவர்த்திக்கென்று அங்கிகரிக்கப்படுகிறது.

## உற்றுநோக்கு

**தலைவர்:** மறுபடியும் ஆதியாகமம் 22:11-19 வரை சத்தமாக வாசிக்கவும், பின்பு

- தேவன் என்ற சொல்லையும், அதன் பிரதிப்பெயர் மற்றும் அதே அர்த்தம் கொண்ட சொற்களையும் அடையாளமிடவும்.

- தேவனுடைய தூதன் என்ற பகுதியைஇவ்வாறு ☐ பெட்டி வடிவில் குறித்துக்கொள்ளவும்.

**கலந்துரையாடு**

- தேவனுடைய தூதன் ஆபிரகாமை எதை செய்யாதபடி தடுத்தார் என்று 11, 12 வசனத்தில் வாசிக்கிறோம்?
- தேவனுடைய தூதன் ஆபிரகாமை ஏன் தடுத்தார்?
- தேவன் ஆபிரகாமிற்கு செய்ததையும், ஆதியாகமம் 22:1 ஐயும் எப்படி சம்பந்தப்படுத்த முடியும்?
- பயத்தை குறித்து உட்கருத்தில் உள்ள பகுதியை வாசித்து, ஆபிரகாம் தேவனிடத்தில் காட்டின தேவபயம் என்ன என்று விவாதிக்கவும்.

**உட்கருத்து**

12 ம் வசனத்தில், பயம் என்ற சொல் எபிரேயத்தில் 'யாரே'ஆகும். இந்த இடத்தில் இதற்கு தேவனை நம்ப, அவரை கனம்பண்ண அவரிடத்தில் காட்டுகிற பயம் என்று அர்த்தமாகும். இதன் அர்த்தம் அவர்மேல் நடுக்கம் கொள்ளவேண்டும் என்பது அல்ல. அவருடைய தெய்வத்தன்மைக்காக நாம் அவரை மதிப்பது என்பதாகும். ஒரு விசுவாசியின் தேவபயம் என்பது,அவர் தேவனுடைய வழியில் நடந்து அவரை நேசித்து, சேவித்து பரிபூரணமாய் கீழ்ப்படிவது என்பதாகும்.

நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்.

13. ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப்பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய்,கடாவைப் பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான்.

14.ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும என்று இந்நாள்வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது.

15. கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு:

16. நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்;

17. நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவேபெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும்,

18. நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சுந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் ஏன்றார்.

சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும்,

18. நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

· வசனங்கள் 15-18 வரை, கீழ்ப்படிதலின் பலனாக ஆபிரகாமிற்கு தேவன் என்ன செய்வார் என்று தேவதூதன் சொன்னார்? ('கீழ்ப்படிதல்' என்ற சொல் முதலாவதாக வேதத்தில் இங்குதான் பயன்படுத்தப்படுகிறது).

**தலைவர்:** தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை 1, 2,3 என்று வட்டமிட்டு குறிக்கச் சொல்லவும். 17ம் வசனத்தில் உள்ள மாதிரியைப் பார்க்கவும்.

## உற்றுநோக்கு

**தலைவர்:** ஆதியாகமம் 22: 11-19 வரை மறுபடியும் வாசிக்கவும்.

- ஆபிரகாம் மற்றும் அவரைக் குறிக்கும் ஒவ்வொரு சொல்லையும் அடையாளமிடவும்.
- முன்பு செய்ததுபோல தகனபலி என்ற குறிப்பையும் அடையாளமிடவும்

## கலந்துரையாடு

- தகனபலியாக ஆபிரகாம் எதை செலுத்தினார்?
- 14 ம் வசனத்தின்படி இந்த பலி எங்கிருந்து வந்தது?

- 14ம் வசனத்தின்படி ஆபிரகாம் தேவனைப்பற்றி அறிந்துகொண்டது என்ன?
- இந்த நிகழ்வு தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பைகுறிக்கிறது என்று எடுத்துக்கொள்ளவும். ஆதியாகமம் 22:2ல் முதல்முறையாக அன்பைக் குறித்துக் வேதாகமத்தில் காண்கிறோம். இதிலே ஒரு தகப்பன் தன் மகனை பலி செலுத்துவதை சம்மந்தப்படுத்தி பயன்படுத்தப்படுகிறது. நம்முடைய பாவத்திற்கு நாம் சாகவேண்டிய இடத்தில், இயேசு மரித்தார். ஈசாக்கிற்கு பதிலாக . மரிக்கவேண்டிய ஆட்டை யார் கொடுத்தது? இதிலிருந்து நீங்கள் அறிவதுஎன்ன?
- ஆபிரகாமின் பயப்படுதலுக்கும், அவரின் செயலுக்கும், ஆராதனைக்கும் இடையில் உள்ள தொடர்பை நீங்கள் காணமுடிகிறதா?
- தேவனுக்கு பயப்படுதல் ஆராதனையோடு எப்படி சம்மந்தப்படுகிறது?
- ஆதியாகமம் 22: 1-18 ல் ஆபிரகாம் செய்த எல்லாவற்றையும் மறுஆய்வு செய்து, அவருடைய செயல் எப்படி ஆராதனையாகும் என்று கலந்துரையாடவும். ஆபிரகாம் தேவனுக்கு பயந்தார் என்று தேவனுக்கு எப்படித் தெரியும்?

19. ஆபிரகாம் தன் வேலைக்காரரிடத்துக்குத் திரும்பிவந்தான்; அவர்கள் எழுந்து புறப்பட்டு, ஏகமாய்ப் பெயர்செபாவுக்குப் போனார்கள்; ஆபிரகாம் பெயர்செபாவிலே குடியிருந்தான்.

## சுருக்கவுரை

தேவனுடைய உண்மையான ஆராதனை வீரராய், ஆபிரகாமைப்போல் இருக்க என்ன செய்யவேண்டும் என்று காண்கிறீர்கள்? ஆராதனையைக்குறித்து இந்த பகுதியிலிருந்து என்ன கற்றுக்கொள்ளுகிறீர்கள்?

- ஆபிரகாமின் வாழ்க்கையை மாதிரியாய் வைத்து, தேவனுக்கு எப்படி மறுஉத்தரவு கொடுப்பீர்கள்?
- உங்கள் வாழ்க்கைமுறை (அல்லது வேதம் சொல்லுகிறபடி "நடை" ) எவ்வாறு ஆராதனையோடு சும்மந்தப்பட்டிருக்கிறது?
- உங்கள் ஆராதனை முறையில் இது எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

ஒரு பாவியான மனிதன் எவ்வாறு தேவ பிரசன்னத்திற்குள் வரமுடியும், அல்லது தேவனோடு முன்பு ஒருபோதும் இல்லாத அளவில் எப்படி அதிகமாய் நெருங்கி உறவாட முடியும் என்று அறிய வாஞ்சித்தால், மோசே தேவனிடத்தில் பெற்றுக்கொண்ட ஆச்சரியமான ஆராதனை முறையை வரும் வாரத்தில் நீங்கள் காணும்போது அதிகமான ஆசீர்வாதம் பெறுவீர்கள்.

# வாரம் இரண்டு

யூத-கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்து நீங்கள் சிந்திக்கும்போது, இந்த மகா ஒப்பற்ற தேவன், அண்டசராசரங்களைஆளுகைசெய்கிற தேவன், தன்னுடைய படைப்பான மனிதனோடு உறவாட நினைக்கிறார் என்பது கிரகிக்க முடியாத ஒன்றாகும். வேறு எந்த மத நம்பிக்கையிலும் இப்படி ஒரு தத்துவம் இல்லை. நாம் கூப்பிடும்போது தேவன் பதில் அளிக்கிறார், நம்மோடு தன் பிரசன்னத்தின் மூலமாக உறவாட விரும்புகிறார்.

இப்படிப்பட்ட தேவனை ஒருவன் எப்படி ஆராதிப்பது? இதுஅவசியம்தானா? ஆபிரகாம்,ஈசாக்கு, யாக்கோபின் தேவனிடத்தில் நாம் எப்படி வேண்டுமானாலும் வர முடியுமா? தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், இந்த பரிசுத்த தேவனிடத்தில் வர இது எப்படி ஒரு மாற்றத்தை உண்டு பண்ண முடியும்?

தன்னை எப்படி ஆராதிக்கவேண்டும் என்று தேவன் ஆபிரகாமிற்கு கொடுத்த குறிப்பான கட்டளைகளை கடந்த வாரம் பார்த்தோம். ஈசாக்கின் மூலமாக ஆபிரகாமை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்ற வாக்குத்தத்தத்தின் மகனான,தன்னுடைய உயிரினும் மேலான ஈசாக்கை விட்டுவைக்காமல், தேவனுக்கு பயந்து, கீழ்ப்படிந்து, அனைத்தையும் கொடுத்து ஆபிரகாம் ஆராதித்தார்.

இந்த வாரம், ஜனங்கள் தேவனிடத்தில் ஆராதனைக்கு எவ்வாறு வரவேண்டும் என்றுதேவன் மோசேயினிடத்தில் சொன்ன அறிவுரைகளைக் குறித்தும், ஆசரிப்புக் கூடாரத்தை குறித்து தேவனுடைய விளக்கத்தையும் பார்க்கலாம்.

ஆசரிப்பு கூடாரத்துக்கும் ஆராதனைக்கும் என்ன சம்மந்தம்? இந்த கூடாரத்தின் அமைப்பும், அதில் பயன்படுத்தப்படுகிற பொருட்களை வைத்தும், பாவியான மனிதன் தன்னுடைய பரிசுத்தமான தேவனை ஆராதிக்க எப்படி வரவேண்டும் என்று தெரிகிறது. அது இயேசு கிறிஸ்துவையும், உண்மையான பரலோக கூடாரத்தை குறித்த ஒரு படத்தையும் காட்டுகிறது. ஒரு விசுவாசி தேவனை எவ்வவாறு உண்மையாய் ஆராதிக்கவேண்டும் என்றும், அவருடைய பிரசன்னத்தை எப்படி உணரமுடியும் என்றும் நமக்கு தெளிவாய் படம் பிடித்து உணர்த்துகிறது.

## யாத்திராகமம் 25: 8-9

8. அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக.

9. நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக.

### உற்றுநோக்கு

யாத்திராகமம் 25-ல் ஆசரிப்புக்கூடாரத்தின் கட்டுமானத்தை குறித்து தேவன் மோசேயோடு பேசினதை வாசிக்கலாம்.

**தலைவர்:** யாத்திராகமம் 25: 8,9 -ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினர் அடையாளமிடவேண்டிய முக்கியமான வார்த்தையிடம் நீங்கள் வரும்போது, அதை அவர்கள் சத்தமாக சொல்லவும்.

- முன் செய்ததுபோல் **தேவன்** என்ற வார்த்தையை முக்கோண வடிவில் அடையாளமிடவும். அவரைக் குறிக்கும் எல்லா பிரதிப் பெயரையும் அடையாளமிடவும்.
- 'மாதிரி' என்ற வார்த்தையை இவ்வாறு குறிக்கவும்.
- கூடாரம் மற்றும் **பரிசுத்த ஸ்தலம்** என்பதை செவ்வக வடிவில் குறிக்கவும்.

### உற்றுநோக்கு

ஆசரிப்புக் கூடாரம் மற்றும் அதனுடைய கட்டுமானத்தை பற்றி வேதத்தின் மற்ற பகுதிகளோடு ஒப்பிட்டு அதில் உள்ள ஆழ்ந்த உட்கருத்துக்களை கவனிப்போம். எபிரேயர் 8:1-2 மற்றும் 8:5 ல் எபிரேயரின் ஆக்கியோன் ஆசரிப்புக் கூடாரத்தை நியாயப்பிரமாணத்தின்படி கொடுக்கப்படுகிற வெகுமதிக்கு ஒப்பாய் பேசுகிறார்.

## உட்கருத்து

இந்த பகுதியில் கூடாரம் என்ற சொல் எபிரேய மொழியில் "வசித்தல்" என்ற வினைச் சொல்லிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது தேவன் மனிதனோடு சந்தித்து உறவாடின இடமாய் இருந்தது. மனிதன் பலியின் மூலமாய் தேவனைக் கிட்டிச்சேரும் இடமாய் இருந்தது.

**தலைவர்:** எபிரேயர் 8:1-2,5 ஐ சத்தமாக வாசித்து, குழுவினரை

- கூடாரம், மற்றும் பரிசுத்த ஸ்தலம்

- மாதிரி என்ற வார்த்தைகளைக் குறிக்கச் சொல்லவும்.

**கலந்துரையாடு**

- தேவன் மோசேயை என்ன செய்யக் கட்டளையிட்டார்? ஏன்?

- அவர் அதை எவ்வாறு செய்யவேண்டும்?

- கூடாரத்திற்கான மாதிரி எங்கிருந்து வந்தது? எது உண்மையான கூடாரம்?

## எபிரேயர் 8: 1-2, 5

1. மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில். பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய்,

2. பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு.

5. இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டு பண்ணப் போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்.

## யாத்திராகமம் 40:17-33

17. இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தம் ஸ்தாபனம் பண்ணப்பட்டது.

18. மோசே கூடாரத்தை எடுப்பித்தான்; அவன் அதின் பாதங்களை வைத்து, அதின் பலகைகளை நிறுத்தி, அதின் தாழ்ப்பாள்களைப் பாய்ச்சி, அதின் தூண்களை நாட்டி,

19. வாசஸ்தலத்தின்மேல் கூடாரத்தை விரித்து, அதின்மேல் கூடாரத்தின் மூடியை, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே போட்டான்.

20. பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, சாட்சிப்பிரமாணத்தை எடுத்து, அதைப் பெட்டியிலே வைத்து, பெட்டியில் தண்டுகளைப்பாய்ச்சி, பெட்டியின்மேல் கிருபாசன மூடியை வைத்து,

### உற்றுநோக்கு

இந்த பகுதியில் தேவன் மோசேயினிடத்தில் கூடாரத்திற்குள் வைக்கவேண்டிய பொருட்களை குறித்து சொன்ன காரியங்களை பார்க்கலாம்.

**தலைவர்:** யாத்திராகமம் 40: 17-33 ஐ வாசிக்கவும். கீழ் உள்ள பகுதியை அடையாளமிட்டு,நீங்கள் வாசித்த பகுதிக்கான வரைபடத்தை கவனிக்கவும்.

- 'தேவன் மோசேக்கு கற்பித்தபடியே' என்ற சொற்றொடரை அடிக்கோடிடவும்.
- கூடாரம் என்று வருமிடங்களில் செவ்வகக் குறியிடவும்.

ஒவ்வொரு பகுதியாய் வாசிக்கும் போது, சற்று நிதானமாக வரைபடத்தை பார்த்து, ஒவ்வொரு பொருட்களும் வைக்கப்பட்டிருக்கிற இடத்தை கவனிக்கவும். நீங்கள் கவனித்தீர்கள் என்றால் அது மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து ஆரம்பித்து அங்கிருந்து வெளியே செல்கிறது




ஆசரிப்புக்கூடாரம்










21. பெட்டியை

வாசஸ்தலத்துக்குள்ளே

கொண்டுபோய்,

மறைவின்

திரைச்சீலையைத்

தொங்கவைத்து,

சாட்சிப்பெட்டியை

மறைத்துவைத்தான்.

22. பின்பு, கர்த்தர் மோசேக்குக்
கற்பித்தபடியே, மேஜையை
ஆசரிப்புக்கூடாரத்தில்
வாசஸ்தலத்தின் வடபுறமாய்த்
திரைக்குப் புறம்பாக வைத்து,

23. அதின்மேல் கர்த்தருடைய
சமுகத்தில் அப்பத்தை
வரிசையாக அடுக்கி வைத்தான்.

24. பின்பு, கர்த்தர்
மோசேக்குக்
கற்பித்தபடியே,
குத்துவிளக்கை
ஆசரிப்புக்கூடாரத்தில்
மேஜைக்கு எதிராக
வாசஸ்தலத்தின்
தென்புறத்திலே வைத்து,

25. கர்த்தருடைய சந்நிதியில் விளக்குகளை ஏற்றினான்.

26. பின்பு கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, ஆசரிப்புக் கூடாரத்தில் திரைக்கு முன்பாகப் பொற்பீடத்தை வைத்து,



தங்க குத்துவிளக்கு

27. அதின்மேல் சுகந்தவர்க்கத்தினால் தூபங்காட்டினான்.



தூப பீடம்

28. பின்பு, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, வாசஸ்தலத்தின் தொங்குதிரையைத் தூக்கிவைத்து,

29. தகனபலிபீடத்தை ஆசரிப்புக்கூடாரமான வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து, அதின்மேல் சர்வாங்கதகனபலியையும் போஜனபலியையும் செலுத்தினான்.



வெண்கல பலிபீடம்



வெண்கல தொட்டி

**கலந்துரையாடு**

- ஒவ்வொரு பொருட்களும் எங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்று விரைவாக ஒரு மறுசீராய்வு செய்யவும். இதை முதலில் "வெளிப்பிரகாரத்தின் நுழைவாயிலிலிருந்து" செய்யவும்.

- ஆசரிப்புக் கூடாரம் எவ்வாறு கட்டப்பட்டது? ஜனங்கள் தங்கள்சொந்த விருப்பத்தின்படி அதை கட்ட முடிந்ததா?

- நாம் கற்றதில் இதுவரை, தேவனை ஆராதிக்கவேண்டிய விதம் பற்றி இது உங்களுக்கு காண்பிக்கின்றதா?

30. அவன் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே தொட்டியை வைத்து, கழுவுகிறதற்கு அதிலே தண்ணீர் வார்த்தான்.

31. அவ்விடத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவினார்கள்.

32. கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்குள்ளே பிரவேசிக்கிறபோதும், பலிபீடத்தண்டையில் சேருகிறபோதும், அவர்கள் கழுவிக்கொள்ளுவார்கள்.

33. பின்பு, அவன் வாசஸ்தலத்தையும் பலிபீடத்தையும் சுற்றிப் பிராகாரத்தை நிறுத்தி, பிராகாரத்தின் தொங்குதிரையைத் தொங்கவைத்தான்; இவ்விதமாய் மோசே வேலையை முடித்தான்.

## யாத்திராகமம் 40: 34-38

34. அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.

35. மேகம் அதின்மேல் தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால், மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது.

36. வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணப் புறப்படுவார்கள்.

37. மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள்வரைக்கும் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள்.

### உற்றுநோக்கு

ஆசரிப்புக்கூடாரக் கட்டுமான வேலைகளை மோசே முடித்த பிறகு என்ன நடந்தது என்பதை நாம் உற்றுநோக்குவோம்.

**தலைவர்:** யாத்திராகமம் 40:34-38 வரை வாசித்து, மாணவர்களை அடையாளமிடச் சொல்லவும்

- கூடாரத்திற்கு முன்செய்தது போல் செவ்வக வடிவம்



- வாசஸ்தலம
- மேகம்






ஆசரிப்புக்கூடாரம்

### கலந்துரையாடு

- பொருட்கள் எல்லாம் கூடாரத்திற்குள் வைத்து, வேலை முடிந்த பிறகு என்ன நடந்தது?
- மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினபோது, வாசஸ்தலத்தை எது நிரப்பினது? மேகம் எதை குறிக்கிறது?

• மேகம் என்ற அடையாளமிட்ட குறிப்பிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்ளுகிறீர்கள்?

யாத்திராகமம் 25:8ல் “அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக” என்று தேவன் மோசேயினிடத்தில் கூறியதற்கு இது எந்தவிதத்திலாவது இணையாய் இருக்கிறதா?

## உற்றுநோக்கு

இப்படி எங்கும் தூக்கிச் செல்லக்கூடிய கூடாரத்தில்தான் தேவன் ஜனங்கள் மத்தியில் 500 வருஷம் தாபரித்திருந்தார். பின்பு தேவபிரசன்னம், சாலொமோன் தேவ கட்டளையின்படி கட்டின தேவாலயத்துக்கு சென்றது.

பாபிலோனியர்கள் எருசலேமை கி.மு. 586ல் கடைசியாக சிறைபிடித்தபோது தேவனுடைய பிரசன்னம் சாலொமோன் தேவாலயத்தைவிட்டு நிரந்தரமாய் நீங்கினது. சாலொமோன் தேவாலயம் முற்றிலும் அழிக்கப்பட்டது.

யூதர்கள் பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பினபோது, தேவாலயம் திரும்பக் கட்டப்பட்டது. பின்பு ரோம அரசாட்சியின்போது, ஏரோது ஆலயத்தை மேலும் சீராக்கி விரிவாக்கினார். ஆனாலும், தேவனுடைய பிரசன்னம் மகா பரிசுத்த ஸ்தலத்தின்மேல் இருக்கவில்லை. தேவனுடைய மகிமையின் பிரசன்னம் அன்றிலிருந்து எவரும் காணவில்லை…

38. இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாம் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருந்தது.

## யோவான் 1: 1-2, 14

1. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

2. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.

14. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

**தலைவர்:** குழுவினர் யோவான் 1:1-2,14 ஐ சத்தமாக வாசிக்கவும். 'வாசம்' மற்றும் 'மகிமை' என்ற வார்த்தைகளை குறிக்கவும்.

**கலந்துரையாடு**

• இந்த வசனங்களின்படி, தேவனுடைய மகிமை இப்பொழுது எங்கே வாசம்பண்ணுகிறது?

• ஏரோதால் புதுப்பிக்கப்பட்ட ஆலயத்திற்குள் இயேசு சென்றபோது என்ன நடந்தது? (இது இரண்டாம் ஆலயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது)

**உற்றுநோக்கு**

இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, தன் சீடர்களை மேல்வீட்டு அறையில் கூட்டி உங்களுக்கு ஓர் இடத்தை ஆயத்தம்பண்ண தான் பிதாவினிடத்திற்கு திரும்ப செல்வதாக கூறினார். மேலும், அவர்களை தனியேவிடமாட்டேன் என்றார். அவர் பிதாவிடம் சென்ற பின்பு பரிசுத்த ஆவியை அவர்களிடம் அனுப்புவேன் என்றார். யோவான் 14: 23 ல் “ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்”என்று கூறினார். அதாவது, தேவனை விசுவாசிக்கிறவர்களுக்குள் தேவனுடைய ஆவி தங்கியிருப்பார் என்பதாகும்.

**தலைவர்:** 1 கொரிந்தியர் 3:16, 6:19-20 வசனங்களை சத்தமாக வாசிக்கவும். நீங்கள் வாசிக்கும்போது மாணவர்களை, அவர்கள் அடையாளமிடும் முக்கியமான வார்த்தைகளை சொல்லச் சொல்லவும். இந்த வார்த்தைகள், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவர்களுக்கு எழுதப்பட்டது என்பதை மனதில் வைக்கவும்.
கீழுள்ளவைகளை அடையாளமிடவும்:

- ஆலயம் - நீங்கள் ஏற்கனவே “கூடாரம்” என்று அடையாளமிட்டதுபோல்
- தேவனுடைய ஆவி அடிக்கோடிடவும்
- மகிமைபடுத்தி வட்டமிடவும்
- உனக்குள் வாசம்பண்ணுகிறார் - 'மேகம்” என்று நீங்கள் குறித்ததுபோல்

## கலந்துரையாடு

- இந்த வேத வசனங்களின்படி,தேவன் இன்று எங்கே வாசம்பண்ணுகிறார்? எது தேவாலயம்?
- இந்த பகுதியிலிருந்து, தேவனுடைய மகிமை மகா பரிசுத்த ஸ்தலத்தின்மேல் இருந்த மகிமையின் மேகத்திற்கும், அவருடைய குமாரனுக்குள்ளும், விசுவாசிகளுக்குள்ளும் இருப்பதை குறித்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?
- இவைகளை அறிந்துகொள்வது தேவனை ஆராதிக்க எந்த வழியில் உதவுகிறது?

## 1 கொரிந்தியர் 3: 16

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

## 1 கொரிந்தியர் 6: 19-20

19. உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?

20. கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

## சுருக்கவுரை

பழைய ஏற்பாடு முழுவதும் தேவ மகிமையானது இஸ்ரவேலர் மத்தியில் கூடாரத்தில் இருந்த தேவ பிரசன்னத்தோடு தொடர்புகொண்டுள்ளது. புதிய உடன்படிக்கைக்குள் இருக்கும் புதிய ஏற்பாட்டில் தேவ மகிமை நமக்குள் இருந்து வெளிப்படும் தேவ பிரசன்னமாயிருக்கிறது.

ஆசரிப்புக்கூடாரமானது தேவனுக்கு ஒரு குறிப்பிட்ட தங்கும் ஸ்தலமாயிருந்தது, அது தேவனுடைய மகிமையை பகலிலே மேகமாகவும் இரவிலே அக்கினி ஸ்தம்பமாகவும் இருக்கும் ஒரு இடமாய் இருந்தது. மேகம் எழும்பினபோது இஸ்ரவேலர் புறப்பட்டார்கள். மேகம் நிற்கும் இடத்தில் தங்கினார்கள். தேவன் புறப்பட்டால் இஸ்ரவேலரும் புறப்பட்டார்கள். இல்லையெனில் அங்கேயே இருந்தார்கள். இதற்கு இவர்களுக்கு எந்த நிபந்தனையும் அல்லாத அர்ப்பணிப்பு தேவையாயிருந்தது.

· தேவன் நம்மை தன்னுடைய ஆலயம் என்று அழைக்கிறார், இதற்கு என்ன அர்த்தம்? இது நம் வாழ்க்கையில் எப்படிப்பட்ட விளைவை ஏற்படுத்துகிறது?
· இது நம்முடைய ஆராதனையோடு எப்படி சம்மந்தப்படுகிறது? ஆராதனை என்பதுஒரு சபையில், ஆரம்பத்தில் பாடல் பாடுகிற நேரத்தைக் காட்டிலும் மேலானதாய் இருக்கிறதா?

அடுத்த வாரம் ஆசரிப்புக்கூடாரத்தில் ஒரு ஆசாரியனின் வேலை, மற்றும் கூடாரத்தில் இருக்கும் பொருட்களின் வேலை என்ன என்பதையும்,இதனால் பாவமன்னிப்பும் தேவனோடு எப்படி சரியான உறவு ஏற்படும் என்றும் பார்க்கலாம். தேவனுடைய பிரசன்னத்திற்கு செல்லும் பாதையை நீங்கள் அறிய விரும்பினால் உங்கள் குழுவினருடன் அடுத்த வாரம் பார்க்கலாம்.

## வாரம் மூன்று

மோசே சீனாய் மலைக்கு 10 கற்பனைகளை பெற்றுக்கொள்ள சென்றபோது ஜனங்கள் மரித்துவிடுவார்கள் என்பதால் அவனோடு வரமுடியவில்லை. பரிசுத்தம் இல்லாமல் பரிசுத்தமான தேவ பிரசன்னத்திற்குள் ஒருவனும் செல்லமுடியாது.

மோசே 40 நாட்கள் இரவும் பகலும் மலையின்மேல் இருந்தார். அப்பொழுது தேவன் மோசேயிடம் 10 கற்பனைகள் மற்றும் ஆசரிப்புக் கூடாரம் செய்வதற்கான முறைமைகள் மாத்திரமல்ல, மோசே செய்யவேண்டிய ஆசாரியர்கள் அபிஷேகம், நியமனம் மற்றும் அவர்களைப் பரிசுத்தப்படுத்தி ஆசரிப்புக்கூடாரத்தில் யார் என்ன வேலை செய்யவேண்டும் என்பதையும் விளக்கமாய்க் கூறினார்

மனிதனுக்கு ஒரு பிரதிநிதி தேவை. இந்த புதிய ஆராதிக்கும் ஸ்தலத்தில் மனிதனுக்கு தனக்கு பதிலாய் தேவனிடத்தில் மன்றாடவும், தேவனை பிரியப்படுத்தும் வகையில் பலிகளை செலுத்தவும், அந்த பலிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மனிதனுக்கும் தேவக்கும் உள்ள உறவை சீர்செய்யவும் ஒருவர் அவசியமாய் இருந்தது. அப்போதுதான் தேவன் மனிதனின் மத்தியில் தங்குவார், அதனால் ஒருவரையொருவர் தொடர்புகொள்ள முடியும்.

ஒரு ஆசாரியன் எப்படி, எப்போது ஆராதனை செய்யவேண்டும் என்று தேவன் ஆசரிப்புக்கூடாரத்தில் தெளிவாய் கட்டளை கொடுத்தார். ஆசாரியன் தன்னிச்சையாக எதையும் செய்ய முடியாது. மீண்டுமாக, தேவனுடைய வழியில்தான் அது செய்யப்படவேண்டும்.

ஆசாரியனையும், அவன் கூடாரத்திற்குள் செல்லவேண்டிய பாதையையும் கவனிக்கும்போது, உண்மையான ஆராதனையை அனுபவிக்க நாம் செல்லவேண்டிய பாதையை அறிந்துகொள்ளலாம். வருகிற மூன்று வாரங்களில் கூடாரத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிகளுக்கும் ஆசாரியர்களுக்கும் உள்ள தொடர்பையும், இது எப்படி இயேசுவின் நிழலோட்டமாய் இருக்கிறது என்றும், மேலும் எப்படி இன்று நமக்கு தொடர்புபடுகிறது என்றும் பார்ப்போம்.

### உற்றுநோக்கு

யாத்திராகமம் 28: 1-ன்படி, தேவன் ஆரோன் மற்றும் அவன் சந்ததியை தம்முடைய ஆசாரிய பணிக்கென்று பிரித்தெடுத்தார்.

## லேவியராகமம் 9: 7

மோசே ஆரோனை நோக்கி: நீ பலிபீடத்தண்டையில் சேர்ந்து, கர்த்தர் கட்டளையிட்டபடியே, உன் பாவநிவாரண பலியையும் உன் சர்வாங்க தகனபலியையும் செலுத்தி, உனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, ஜனங்களுடைய பலியையும் செலுத்தி, அவர்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய் என்றான்.

இந்த ஆசாரியன் தேவனுக்கு பணி செய்யவேண்டும். இதை செய்தபின்தான் ஆராதனை இருக்கும்.

**தலைவர்:**

லேவியராகமம் 9: 7 ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரிடம் முக்கிய வார்த்தைகளான ஆசாரியன், பாவநிவிர்த்தி, ஆரோன் போன்ற வார்த்தைகளை திரும்ப சொல்லச் சொல்லவும்.

- ஆசாரியனுக்கு 'ஆ' என்று குறிக்கவும்
- 'பாவநிவிர்த்தியை' அரைவட்டத்தில் இப்படி குறிக்கவும் ⌒

### உட்கருத்து

பாவநிவிர்த்தி என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கு மூடுதல் என்று அர்த்தம். இது பாவங்களை பலியின் இரத்தத்தால் மூடி, பாவியான மனிதனை பரிசுத்தமான தேவனோடு கிட்டிச்சேர செய்யும் கருத்தில் பயன்படுத்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணத்தின்படி, பாவத்தின் சம்பளத்திற்கு பதிலாக ஒரு மிருகத்தின் இரத்தத்தினால் இதை நிறைவேற்றுவார்கள்.

### கலந்துரையாடு

- பாவநிவிர்த்தி என்று அடையாளமிட்டவார்த்தையிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- பாவநிவிர்த்தி எப்படி நிறைவேற்றப்பட்டது?

### உற்றுநோக்கு

முன்பு ஆசரிப்புக்கூடாரத்திலும் பின்பு ஆலயத்திலும் பணிசெய்தவர்கள் எல்லாம் லேவி கோத்திரத்திலிருந்தே வரவேண்டும். லேவியின் வம்சத்தில் ஆரோன் குடும்பத்தார் மட்டுமே ஆசாரியர்களாய் வரமுடியும். ஆயினும், காலம் நிறைவேறும்போது தேவன் வேறொருவரை பிரதான ஆசாரியராக நியமிப்பார்.

**தலைவர்:** எபிரேயர் 4:14; 5:9-10; மற்றும் 8:1-2 வரை சத்தமாக வாசிக்கவும். ஆசாரியன் அல்லது ஊழியம் என்ற சொற்கள் வரும்போது முன்செய்ததுபோல குழுவினரை அடையாளமிடச் சொல்லவும்.

### கலந்துரையாடு

- ஆசாரியன் மற்றும் ஊழியன் என்று அடையாளமிட்ட வார்த்தையிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?
- நம்முடைய மகா பிரதான ஆசாரியன் யார்?

## எபிரேயர் 4: 14

வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்.

## எபிரேயர் 5: 9-10

9. தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,

10. மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்

## எபிரேயர் 8: 1-2

1. மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்ன வெனில். பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின்வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய்,

2. பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு.

## வெளிப்படுத்தல் 1: 6

6. நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

- அவர் இப்பொழுது எங்கே இருக்கிறார்?
- அவர் எந்த ஆசரிப்புக் கூடாரத்தில் பணி செய்தார்?

## உற்றுநோக்கு

பழைய உடன்படிக்கையின் நியாயப்பிரமாணத்தின்படி, ஆரோனும் அவன் சந்ததியும் ஆசரிப்புக்கூடாரத்திலும் ஆலயத்திலும் ஊழியம் செய்தார்கள். கிருபையின் புது உடன் படிக்கையின் படி, பரலோகில் இருக்கும் உண்மையான கூடாரத்தில் பணிபுரியும் பிரதான ஆசாரியனாய் இயேசு நம்முடைய பிரதான ஆசாரியன் ஆனார், புதிய ஏற்பாட்டின் சில வசனங்களிலிருந்து இன்று ஆலயமே இல்லாத பட்சத்தில் ஆசாரியர்கள் உண்டா என்று நாம் பார்ப்போம். (உண்மையான விசுவாசியாய் இருந்தால் நம்முடைய சரீரமே இயேசுவின் ஆலயம்)?

**தலைவர்:** வெளிப்படுத்தல் 1: 5-6 மற்றும் 1 பேதுரு 2: 9 ஐ சத்தமாக வாசிக்கவும். குழுவினரை ஆசாரியன் மற்றும் ஆசாரியத்துவம் என்ற வார்த்தைகளை முன்பு செய்ததுபோல் அடையாளமிடச் சொல்லவும்.

**கலந்துரையாடு**

- நீங்கள் இப்பொழுது கவனித்த வசனத்தின்படி யார் ஆசாரியர்கள்?- யாருக்காக?
- இதை தெரிந்துகொண்டதால் நம் நடைமுறை ஆராதனை முறையின் எப்பகுதியாவது பாதிக்கப்படுமா? எப்படி?
- நாம் எதை பறைசாற்ற வேண்டும்? இதை நீங்கள் ஆராதனையாக கருதமுடியுமா?

**உற்றுநோக்கு**

கடந்த வாரம் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் செல்ல ஒரே வழிதான் என்று பார்த்தோம், அதாவது எப்பொழுதும் கிழக்கே இருக்கும் பிரகாரத்தின் நுழைவாயில் வழி மட்டுமே. இந்த மாதிரி படிவத்திலிருந்து எந்த படத்தை பார்க்கவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்?




பிரகாரத்தின் நுழைவாயில்

**1 பேதுரு 2: 9**

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

## யோவான் 10: 9

இயேசு: "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்."

## யோவான் 14: 6

அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

**தலைவர்:**

யோவான் 10:9 மற்றும் 14:6 ல் ஆசரிப்புக் கூடாரத்தின் இந்த பகுதி இயேசுவில் எப்படி நிறைவேறிற்று என்று பார்க்க வாசிக்கவும்.

- 'இயேசு' என்ற வார்த்தையை, இதன் பிரதிப்பெயர் உட்பட சிலுவை அடையாளத்தால் குறிக்கவும்.

**கலந்துரையாடு**

- இந்த வசனங்களிலிருந்து இயேசுவை குறித்து என்ன தெரிந்து கொள்கிறோம்? இது நீங்கள் கற்றுக்கொண்ட "பிரகார வாசலுடன்" எப்படி பொருந்துகிறது?
- இதனை தேவனை ஆராதனை செய்ய எப்படி பயன்படுத்த முடியும்?
- ஒருவர் இயேசு கிறிஸ்து இல்லாமல் தேவனை சரியாக ஆராதிக்க முடியுமா?



வெண்கல பலிபீடம்

## உற்றுநோக்கு

**தலைவர்:** வெண்கல பலிபீடம் இருக்கும் திசையை மீண்டும் பார்க்க ஆசரிப்புகூடாரம் உள்ள படத்தை குழுவினரை பார்க்கச் சொல்லவும்.



வெண்கல பலிபீடம்

ஆராதனை செய்ய கூடாரத்திற்கு வருகிறவர்கள் ஆசரிப்புக் கூடார கதவு வழியே நுழைந்த பிறகு முதலில் காண்பது வெண்கல பலிபீடம். லேவியராகமத்தில் முதல் ஒன்பது அதிகாரங்கள் வெண்கல பலிபீடத்தில் செலுத்தக்கூடிய 7 விதமான பலிகள் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. ஆகிலும், ஒன்றினை மட்டும் நாம் பார்ப்போம்.

**தலைவர்:** லேவியராகமம் 1:2-5வரை சத்தமாய் வாசிக்கவும்.

- பலி கொண்டுவருகிற 'நபரை' வட்டமிட்டுக்கொள்ளவும். தகன பலியை இவ்வாறு குறிக்கவும் 
- 'ஆசாரியனு'க்கு 'ஆ' என்று முன் குறித்ததுபோல் குறிக்கவும்.
- 'பாவ நிவிர்த்தி'க்கு அரை வட்டத்தில் முன் குறித்ததுபோல் குறிக்கவும்

### லேவியராகமம் 1: 2-5

2. நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லவேண்டியது என்னவென்றால், உங்களில் ஒருவன் கர்த்தருக்குப் பலி செலுத்த வந்தால், மாட்டுமந்தையிலாவது ஆட்டுமந்தையிலாவது ஒரு மிருகத்தைத் தெரிந்தெடுத்து, பலிசெலுத்த வேண்டும்.
3. அவன் செலுத்துவது மாட்டு மந்தையிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், அவன் பழுதற்ற ஒரு காளையைச் செலுத்துவானாக; கர்த்தருடைய சந்நிதியில் தான் அங்கிகரிக்கப்படும்படி, அவன் அதை ஆசரிப்புக்கூடார வாசலில் கொண்டுவந்து,
4. அது தன் பாவநிவிர்த்திக்கென்று அங்கிகரிக்கப்படும்படி தன் கையை அதின் தலையின்மேல் வைத்து,

5. கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தை எடுத்து, அதை ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

## யோவான் 1: 29

மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.

## எபிரேயர் 10: 4-12

4. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே.

5. ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும்

### கலந்துரையாடு

- ஒருவர் தகன பலி செலுத்துவதற்கான வழிமுறை என்ன? (இதற்கு பதிலளிக்க யாராவது ஒருவர் சீக்கிரமாக செய்முறை மூலம் விளக்கிக்காட்டினால் எளிதில் நினைவில் கொள்ள முடியும்.)
- இந்த பலி எங்கே செலுத்தப்பட்டது?
- பலியின் இரத்தத்தை என்ன செய்தார்கள்?
- வெண்கல பலிபீடம் கூடாரத்தின் முதல் பொருளாய் இருக்கிறது, இது உங்களுக்கு நாம் தேவனை ஆராதிக்க எப்படி வரவேண்டும் என்று ஏதாவது கூறுகிறதா?

### உற்றுநோக்கு

**தலைவர்**: யோவான் 1: 29. எபிரேயர் 10: 4-12 வரை சத்தமாக வூசிக்கவும்

- 'இயேசு' என்ற வார்த்தையை, இதன் பிரதிப்பெயர் உட்பட சிலுவை அடையாளத்தால் குறிக்கவும்
- பலிகள், காணிக்கை மற்றும் தகனபலிகள் என்ற வார்த்தைகளை, முன்பு "தகனபலிக்கு" குறித்தது போல் குறிக்கவும்.
- பாவம் என்ற சொல்லை 'பா' என்று குறிக்கவும்.

· நேரத்தைக் குறிக்கும் சொற்களை கடிகார அடையாளத்தில்குறிக்கவும்.



**கலந்துரையாடு**

- இயேசுவைக் குறித்து அடையாளமிட்டதிலிருந்து என்னகற்றுக் கொள்ளுகிறீர்கள்?
- இயேசு தன்னுடைய உடலை பலியாய் கொடுக்க ஏன் மரிக்கவேண்டும்?
- இயேசு தன்னுடைய சரீரத்தை பலியாய் கொடுத்ததின் நிமித்தம் எதை நிறைவேற்றினார்? எவ்வளவு காலம் மட்டும்?
- ஆசரிப்புக்கூடாரத்தின் எந்த பொருள் சிலுவையைக் குறிக்கிறது? எப்படி?
- ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள எல்லா பொருட்களும் நம்மை உடன்படிக்கை பெட்டிக்கும், மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் கிருபாசனத்தண்டைக்கும் கொண்டுசெல்வதிலிருந்து தேவனை ஆராதிப்பதைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக்கொள்ளுகிறீர்கள்?

நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்;

6. சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர்.

7. அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்.

8. நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டுவருகிற பலிகளைக்குறித்து மேற்சொல்லியபடி: பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரணபலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்னபின்பு:

9. தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதைநீக்கிப்போடுகிறார்.

10. இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.

11. அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான்.

12. இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து,

## யாத்திராகமம் 30: 18-20

18. கழுவுகிறதற்கு வெண்கலத்தால் ஒரு தொட்டியையும், வெண்கலத்தால் அதின்



வெண்கல தொட்டி

**உற்றுநோக்கு**

**தலைவர்:** வெண்கல தொட்டி இருக்கும் வரைபடத்தை மீண்டும் பார்க்க ஆசரிப்புகூடாரம் உள்ள படத்தை குழவினரை பார்க்கச் சொல்லவும். பின்பு யாத்திராகமம் 30: 18-20 வரை வாசிக்கவும்.

- நீங்கள் அதைபடிக்கின்றவேளை குழவினரை, **'ஆரோன்'** மற்றும் அவர் பிள்ளைகளை 'ஆ' என்றும்'
- வெண்கல தொட்டி'யை கோடிடவும்
- 'தண்ணீரை' இப்படி குறிக்கவும் ∿∿∿ சொல்க.



வெண்கல தொட்டி

**கலந்துரையாடு**

- வெண்கல தொட்டியின் பயன்பாடு என்ன?

- அதை யார், எப்பொழுது பயன்படுத்துவார்கள்?
- அது ஏன் பயன்படுத்தப்பட்டது? அவர்கள் கழுவவில்லை என்றால் என்ன நடக்கும்?
- பரிசுத்தமான தேவனை ஆராதிப்பதைப் பற்றி இது உங்களுக்கு என்ன சொல்கிறது?

**உற்றுநோக்கு**

வெண்கல தொட்டியை பற்றி மேலும் சிறந்த வெளிச்சத்தை பெற்றுக்கொள்ள வேதத்தின் வேறு சில பகுதிகளைப் பார்ப்போம்.

**தலைவர்:** சங்கீதம் 24: 3-4; எபேசியர் 5: 25-26; மற்றும் 1 யோவான் 1: 9 ஐ சத்தமாக வாசிக்கவும்.

- சுத்தம், சுத்தப்படுத்துதல், மற்றும் தண்ணீரில் கழுவுதல் -என்ற வார்த்தைகளைக் குறிக்கவும்.
- எபேசியர் 5: 25 ல் இயேசு கிறிஸ்து என்ற சொல்லை குறிக்கவும்.

**உட்கருத்து**

'பரிசுத்தப்படுத்துதல்' என்ற சொல் கிரேக்கத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட பதமாகும். எப்பொழுது ஒன்று பரிசுத்தமாகு மென்றால் அதை சுத்தப்படுத்தி, அர்ப்பணித்து தேவனுக்கென்று வேறு பிரித்து வைத்திருக்கும் போதுதான்.

பாதத்தையும் உண்டாக்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக.

19. அதனிடத்தில் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்.

20. அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும், கர்த்தருக்குத் தகனத்தைக் கொளுத்தவும் பலிபீடத்தினிடத்தில் ஆராதனைசெய்யவும் சேரும்போதும், அவர்கள் சாகாதபடிக்குத் தண்ணீரினால் தங்களைக் கழுவக்கடவர்கள்.

## சங்கீதம் 24: 3-4

3. யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?

4. கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.

## எபேசியர் 5: 25-26

25. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,

26. தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,

## 1 யோவான் 1: 9

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**கலந்துரையாடு**

- யார் பரிசுத்தமான தேவனண்டை நெருங்க முடியும்? யார் அவர் பிரசன்னத்தில் நிற்க முடியும்?
- இயேசு ஏன் நமக்காக தன்னை சிலுவையிலே கொடுத்தார்? அவர் ஏன் சிலுவையில் மரிக்கவேண்டும்?
- இயேசு சிந்தின இரத்தத்தினிமித்தம் நமக்கு பாவ மன்னிப்பு உண்டு, இதைத் தவிர நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து தேவனுடைய பிள்ளைகள் ஆகும்போது நம் வாழ்க்கையில் வேறு விதமான சுத்தமாக்குதல் ஏதாவது இருக்கிறதா? எபேசியர் 5:25,26 என்ன சொல்லுகிறது?
- 1 யோவான் 1: 9 ன்படி ஒரு விசுவாசி பாவம் செய்யும்போது என்ன செய்யவேண்டும்?
- மேலும் தேவன் என்ன செய்வார்?
- நீங்கள் பார்த்ததிலிருந்து, சுத்திகரிப்பு இல்லாமல் நீங்கள் தேவனை ஆராதிக்க முடியுமா?
- ஆராதனையில் பங்குபெற்று பாடல் பாடி ஆராதிக்கும்போது கைகளை உயர்த்தினால், அந்த கைகள் எப்படி இருக்கவேண்டும்? இது எப்படி சாத்தியம் ஆகும்?

## சுருக்கவுரை

மெய்யான ஆராதனையைப் பற்றி நாம் இந்த வாரம் என்ன கற்றுக்கொண்டோம் என்பதை கீழ்க்கண்ட பயிற்சியை செய்வதின் மூலம் சுருக்கமாய் பார்ப்போம்.

ஆராதனை என்ற சொல்லின் அடிப்படை அர்த்தம் பணிந்து குனிதல் நினைவில் கொள்ளுங்கள். ஆராதனை என்பது ஒருவருடைய மகத்துவத்தை அறிந்து அதன்படி செயல்படுவதாகும்.

ரோமர் 12-ம் அதிகாரத்தில் நீங்கள் வாசிக்கவுள்ள பகுதி பவுல் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியின் முழு விளக்கத்தையும் எழுதி இருக்கிறார். அவருடைய மரணம், உயிர்த்தெழுதல் நம்முடைய வாழ்க்கையில் எவ்வாறு நடைமுறையில் பொருந்துகிறது. இதனுடைய விரிவான விளக்கத்தை முதல் 11 அதிகாரங்களில் சொல்லியிருக்கிறார். எனவே, 12 ம் அதிகாரம் அதன் முடிவுரையாக “ஆகையால்” என்ற வார்த்தையுடன் துவங்குகிறது.

**தலைவர்:** ரோமர் 12: 1 ஐ சத்தமாக வாசிக்கவும்.

- **'பலி'** என்ற சொல்லை குறிக்கவும், தகனபலிக்கு குறித்ததுபோல்

- **ஆராதனை** என்ற சொல்லை 'ஆ' என்று குறித்துக்கொள்ளவும். நற்செய்தியின் முடிவுரைக்கு வாசகர்களை கொண்டுசெல்லும் பவுல், அவர்களை ஒரு அர்ப்பணிப்புக்கு அழைக்கிறார், கல்வாரியில் இயேசு கிறிஸ்து நமக்காக செய்த தியாகத்துக்கு ஒப்புக்கொடுக்க அழைக்கிறார்.

### ரோமர் 12: 1

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

- நாம் எப்படிப்பட்ட அர்ப்பணிப்புக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்? ரோமர் 12:1ல் பலியைக் குறித்து என்ன எழுதியிருக்கிறது?

- அது ஒரு கட்டளையா அல்ல வேண்டுகோளா? எதன் அடிப்படையில்?

- ரோமர் 12:1 ல் இருக்கும் சத்தியத்திற்கு பதிலலிக்காமல் ஒரு உண்மையான ஆராதனையை செய்யக்கூடும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

- ஆராதனையைக் குறித்து நீங்கள் இந்த வாரத்தில் அல்லது கடந்த மூன்று வாரத்தில் தெரிந்துகொண்ட மிகவும் முக்கியமான உட்கருத்து என்ன?

சில நிமிடம் நீங்கள் இந்த வாரம் கற்றுக்கொண்டதைக் குறித்து தேவனோடு பேசலாம், அல்லது குழுவாகவும் இதை செய்யலாம். அவருடைய வார்த்தைகளில் கண்ட உண்மையால் தேவனை உண்மையோடு ஆராதியுங்கள்.

## வாரம் நான்கு

பூமியில் உள்ள கூடாரமானது, பரலோக கூடாரத்திற்கு நிழலாய் இருக்கிறது, ஆவியோடும் உண்மையோடும் தேவனை எப்படி ஆராதிக்கவேண்டும் என்பதற்கான ஒரு உருவகமாக இருக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள ஒவ்வொரு பொருட்களும் எப்படி இயேசுகிறிஸ்துவுக்கு திருஷ்டாந்தமாக உள்ளது என்பதை தொடர்ந்து ஆராயும்போது, உண்மையான ஆராதனை வாழ்வு வாழ்வது எப்படி என்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும்.

கூடாரத்தின் 2 முக்கிய பாகங்கள்: வெளிப்பிரகாரம் மற்றும் ஆசரிப்பு கூடாரம் (முழு கூடாரமும் ஆசரிப்பு கூடாரம் என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது). ஆசரிப்புக் கூடாரத்தில் மேலும் இரண்டு பகுதிகள் பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம். கடந்த வாரம் வெளிப்பிரகாரத்தில் உள்ள பொருட்களைக் குறித்து பார்த்தோம்: பிரகார நுழைவாயில், பலிபீடம், மற்றும் தொட்டி. இந்த வாரம் பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள சமுகத்தப்ப மேஜை, குத்துவிளக்கு, தூபபீடம் போன்றவைகளைக் காண்போம்.

கடந்த வாரம், ஆசாரியன் வாசலில் நுழைந்து பலிபீடம் சென்று (தனக்காகவும் மக்களுக்காகவும் பலிசெலுத்தும் இடம்), பின்பு தொட்டியில் கழுவுகிறார் என்று பார்த்தோம். பாவியான மனிதன் தேவனிடத்தில் எப்படி வரமுடியும் என்று இது காண்பிக்கிறது. தேவனண்டை வருவதற்கு நமக்கு ஒரே ஒரு வழிதான் கொடுக்கப்பட்டு இருக்கிறது - அதுதான் வாசல், இயேசு கிறிஸ்துவே அந்த வாசல். கூடாரத்தில் வாசற்கதவு எப்போதும் சூரியன் உதிக்கும் திசையில் கிழக்கை நோக்கி இருக்கும். முதலாவதாக நாம் தேவனிடத்தில் பலியின் மூலமாய் நம் பாவம் சுத்திகரிக்கப்பட வருகிறோம். ஆகையால், பலிபீடம் இயேசுவின் சிலுவை மரணத்திற்கு நிழலாய் இருக்கிறது. பின்பு வேத வசனத்தின் சுத்திகரிக்கும் வல்லமையால். நம்முடைய பாவங்கள் அறிக்கையிடப்பட்டு பரிசுத்தமாக்கப்படுகிறோம்.

ஆசாரியனின் வழியை பின்பற்றி, அவரோடு பரிசுத்த ஸ்தலத்திலிருக்கும் சந்திப்பு கூடாரத்திற்கு செல்வோம். இங்கு ஆசாரியனின் வலது பக்கத்தில் சமுகத்தப்ப மேஜை இருப்பதை நாம் காணலாம்.

## லேவியராகமம் 24: 5-9

5. அன்றியும் நீ மெல்லிய மாவை எடுத்து, அதைப் பன்னிரண்டு அப்பங்களாகச் சுடுவாயாக; ஒவ்வொரு அப்பம் மரக்காலிலே பத்தில் இரண்டுபங்கு மாவினால் செய்யப்படவேண்டும்.

6. அவைகளை நீ கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜையின்மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு அப்பம் இருக்கும்படியாக வைத்து,

7. ஒவ்வொரு அடுக்கினிடத்தில் சுத்தமான தூபவர்க்கம் போடக்கடவாய்; அது அப்பத்தோடிருந்து, ஞாபகக்குறியாகக் கர்த்தருக்கேற்ற தகனபலியாயிருக்கும்.

8. அப்பத்தை நித்திய உடன்படிக்கையாக இஸ்ரவேல் புத்திரர் கையிலே வாங்கி, ஓய்வுநாள்தோறும் கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கக்கடவன்.



சமுகத்தப்ப மேஜை

**உற்றுநோக்கு**

கூடாரத்தின் வரைபடத்திலிருந்து பரிசுத்த ஸ்தலத்தில் சமுகத்தப்ப மேஜை எங்கே இருக்கிறது என்று பாருங்கள்.

**தலைவர்:** லேவியராகமம் 24: 5-9 மற்றும் யாத்திராகமம் 25: 30 ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'அப்பம்' என்ற சொல்லை வட்டமிட்டுக்கொள்ளவும்.
- 'பரிசுத்தம்' என்ற குறிப்புகளில் கோடிடவும்.
- நேரத்தைக் குறிக்கும் சொற்களை கடிகார அடையாளத்தில் குறிக்கவும்.






சமுகத்தப்ப மேஜை

## உட்கருத்து

'ஷோபிரட்' (அப்பம்) என்றால் எபிரேயத்தில் 'அப்பத்தின் முகம்' அல்லது 'அப்பத்தின் பிரசன்னம்' என்று பொருள். யாத்திராகமம் 25: 30 ல் "பிரசன்னம்" என்றால் "முகம்" என்று பொருள்படும். அப்பமானது தங்கத்தால் செய்யப்பட்ட மேஜையின்மேல் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுடைய முகத்திற்கு அல்லது பிரசன்னத்திற்கு நேராய் திரைக்கு அடுத்தபுறம் வைக்கப்பட்டு இருக்கிறது.

### கலந்துரையாடு

- அப்பத்தைபற்றி என்ன தெரிந்துகொண்டீர்கள்? அது எங்கே வைக்கப்பட்டு இருக்கிறது? எப்பொழுது, யார், எங்கே அதை சாப்பிடுவார்கள் என்பதை கலந்தாலோசிக்கவும்.
- நேரத்தைக் குறித்த வார்த்தைகளை அடையாள மிட்டதின் மூலம் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

### உற்றுநோக்கு

இந்த அப்பம் எதற்கு ஒப்பாக இருக்கிறது என்பதையும், தேவனை ஆராதிப்பதைக் குறித்து இது என்ன கூறுகிறது என்பதையும் நாம் காணவேண்டும்.

9. அது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; அதைப் பரிசுத்த இடத்திலே புசிக்கக்கடவீர்கள்; நித்திய கட்டளையாக கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளில் அது அவனுக்கு மகா பரிசுத்தமாயிருக்கும் என்றார்.

## யாத்திராகமம் 25: 30

மேஜையின்மேல் நித்தமும் என் சந்நிதியில் சமுகத்தப்பங்களை வைக்கக்கடவாய்.

## யோவான் 6: 35, 48-51

35. இயேசு அவர்களை நோக்கி: ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.

48. ஜீவ அப்பம் நானே.

49. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்.

50. இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவெ.

51. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் பசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.

**தலைவர்**: யோவான் 6:35, 48-51 வரை சத்தமாக வாசிக்கவும். குழுவானது…

- இயேசு என்ற வார்த்தை வரும் இடங்களை குறிக்கவும்.
- அப்பம் மற்றும் அதற்கான இணை சொற்களை குறிக்கவும்.
- நேரத்தைக் குறிக்கும் சொற்கள் மீது கடிகார அடையாளமிடவும்.

### கலந்துரையாடு

- அப்பம், இயேசு என்ற வார்த்தைகளை அடையாளமிட்டதிலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- இந்த அப்பம் சாப்பிடுவது குறித்து தொடர்பான வாக்குத்தத்தங்கள் எவை?
- இயேசுவே ஜீவ அப்பம் என்று தெரிகிறதா? இயேசுவுக்கும் மன்னாவுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?

## உற்றுநோக்கு

**தலைவர்:** குழுவாக மத்தேயு 4: 1-4 ஐயும், மத்தேயு 4-ல் இயேசு குறிப்பிடும் உபாகமம் 8: 3 ஐயும் வாசிக்கவும்.

- மீண்டும் 'அப்பம்' என்று வரும் சொற்களை குறியிடவும்.

### உட்கருத்து

ஓய்வுநாள் தவிர தினந்தோறும் "பரலோகத்திலிருந்து

பொழியப்பட்ட" அப்பம்தான் இந்த மன்னா. அது "கொத்துமல்லி அளவாயும் வெண்மைநிறமாயும் இருந்தது, அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது" (யாத் 16:31). இஸ்ரவேல் ஜனங்கள் 40 ஆண்டுகள் வனாந்தரத்திலே பயணம் செய்தபோது அவர்களுக்கு போஷாக்கு அளித்த உணவு இந்த மன்னாதான். அது காலையில் தரையிலே பனியைபோல தோன்றும். இஸ்ரவேல் புத்திரர் அதை தங்கள் குடும்பத்திற்கு அந்தந்த நாளின் தேவைக்கேற்ப தினந்தோறும் அதை சேகரிக்க வேண்டும் என்று கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது. ஆறாம் நாளைத் தவிர அந்த மன்னாவை இராமுழுதும் வைக்கக்கூடாது. ஓய்வு நாளில் மன்னா பொழிவு கிடையாது. அதனால், ஆறாம் நாள் மட்டும் இரண்டு நாளின் தேவைக்கேற்ப சேகரித்துக் கொள்ளலாம்.

### மத்தேயு 4: 1-4

1. அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்.

2. அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.

3. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.

4. அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.

## உபாகமம் 8: 3

அவர் உன்னைச்சிறுமைப் படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல; கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார்.

**கலந்துரையாடு**

பழைய ஏற்பாட்டில், நித்திய சத்தியங்களைக் குறித்த உருவகங்களை தேவன் தந்திருப்பதை ஒரு முறைகூட நீங்கள் காணமுடியும்.

- கற்களை அப்பமாய் மாற்றும் வல்லமை இருந்தும், பிசாசின் ஆலோசனைக்கு ஏன் இயேசு ஒப்புக்கொள்ளவில்லை?
- இயேசு பிசாசோடு பேசும்போது மன்னாவை எதற்கு ஒப்பிடுகிறார்?
- இதிலிருந்து நாம் கற்று, அப்பியாசப்படுத்த வேண்டியது என்ன?
- தேவனை சரியான விதத்தில ஆராதிக்க சமுகத்தப்ப மேஜையிலிருந்து நாம் என்ன உண்மைகளை அறிந்துகொள்கிறோம்?
- "அப்பத்தின் முகம்" யார் என்பதை கவனிக்கவும்.
- தேவ வார்த்தையை ஒதுக்கிவிட்டு தேவனை ஆராதிக்க முடியுமா? வேதம் ஆராதனையில் என்ன பங்கு வகிக்கிறது?
- சபையில் ஆராதனை எப்பொழுது ஆரம்பித்து, எப்பொழுது முடிகிறது?



பொன் குத்துவிளக்கு

**உற்றுநோக்கு**

முறுபடியும் கூடாரத்தின் வரைபடத்தை பார்க்கவும். குத்துவிளக்கு வைக்கப் பட்டிருக்கும் இடத்தைப் பார்க்கவும். அது கூடாரத்தின் தெற்கு திசையில் வைக்கப் பட்டிருக்கிறது. பரிசுத்த ஸ்தலத்திற்குள் வெளிச்சம் கொடுக்கும் ஒரே பொருள் இந்த குத்துவிளக்கு மட்டுமே.



பொன் குத்துவிளக்கு

**தலைவர்:** லேவியராகமம் 24: 2-3 ஐ சத்தமாக வாசித்து குழுவினரை முக்கிய சொற்களை குறிக்கச் சொல்லவும்.

- விளக்கினைக் குறிக்கும் ஒவ்வொரு சொல்லையும் இப்படி அடையாளமிடவும்: 
- நேரத்தைக் குறிக்கும் சொற்களை கடிகார அடையாளத்தில் குறிக்கவும்.

## லேவியராகமம் 24: 2-3

2. குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி அதற்காக இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை இஸ்ரவேல் புத்திரர் உன்னிடத்தில் கொண்டுவரும்படி அவர்களுக்குக் கட்டளையிடு.

3. ஆசரிப்புக் கூடாரத்தில் சாட்சிசந்நிதியின் திரைக்கு வெளிப்புறமாக ஆரோன் அதை எப்பொழுதும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம்மட்டும் கர்த்தருடைய சந்நிதியில்

எரியும்படி ஏற்றக்கடவன்;

இது உங்கள் தலைமுறைதோறும்

செல்லவேண்டிய நித்திய

கட்டளை.

## யோவான் 1: 1-4, 9

1. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

2. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.

3. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

### கலந்துரையாடு

- பொன் குத்துவிளக்கை குறித்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- எதைக்கொண்டு விளக்கு எரியவைக்கப்பட வேண்டும்? அது எங்கிருந்து எடுக்கப்படவேண்டும்?
- எவ்வளவு நேரம் எரியவேண்டும்? இதனை கண்காணிப்பது யார்?

### உற்றுநோக்கு

**தலைவர்:** யோவான் 1: 1-4, 9; 8: 12 மற்றும் எபேசியர் 5: 8 ஐ சத்தமாக வாசிக்கவும்.

- 'இயேசு' என்ற சொல்லை சிலுவை அடையாளத்தில் குறிக்கவும்.
- 'வெளிச்சம்' என்ற வார்த்தையை வட்டமிட்டுக்கொள்ளவும்.

### கலந்துரையாடு

- நீங்கள் உற்றுநோக்கி, அடையாளமிட்ட வசனங்களின்படி உண்மையான வெளிச்சம் யார்?
- மனிதர்க்கு இயேசு என்ன செய்கிறார்?

- இயேசுவை பின் பற்று பவர்களை குறித்து என்ன கற்றுக்கொள்கிறோம்?
- பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளிச்சம் தரக்கூடிய ஒரே வழி குத்துவிளக்குதான், இதிலிருந்து நீங்கள் என்ன முக்கியத்துவத்தை பார்க்கிறீர்கள்?
- ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள குத்துவிளக்கு இயேசுவை எவ்வாறு பிரதிபலிக்கிறது?
- "ஒளியிலே நடப்பதற்கும் உண்மையான ஆராதனை வாழ்விற்கும் இடையே ஏதாவது தொடர்பை நீங்கள் காண்கிறீர்களா?



தூப பீடம்

**உற்றுநோக்கு**

கூடாரத்தின் வரைபடத்திலிருந்து தூபவர்க்கம் போடும் இடத்தை பாருங்கள். (இந்த தூப பீடமும், பலி செலுத்தப் பயன்படும் பலிபீடமும் வித்தியாசமானவைகள் என்பதை மனதில்கொள்ளவும்).

4. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.
9. உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.

## யோவான் 8: 12

மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.

## எபேசியர் 5: 8

முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்.

## யாத்திராகமம் 30: 1, 6-10

1. தூபங்காட்டுகிறதற்கு ஒரு தூபபீடத்தையும் சீத்திம் மரத்தினால உண்டாக்குவாயாக.

6. சாட்சிப்பெட்டிக்கு முன்னிருக்கும் திரைச்சீலைக்கும், நான் உன்னைச் சந்திக்கும் இடமாகிய சாட்சி சந்நிதியின்மேலுள்ள கிருபாசனத்துக்கும் முன்பாக அதை வைக்கக்கடவாய்.

7. ஆரோன் காலைதோறும் அதின்மேல் சுகந்த தூபங்காட்டவேண்டும்; மாலையில் விளக்கேற்றும் போதும் அதின்மேல் தூபங்காட்டக்கடவன்; விளக்குகளை விளக்கும்போதும் அதின்மேல் தூபங்காட்டவேண்டும்.

8. உங்கள் தலைமுறைதோறும் கர்த்தருடைய சந்நிதியில் காட்டவேண்டிய நித்திய தூபம் இதுவே.

**தலைவர்:** யாத்திராகமம் 30:1,6-10 : வரை வாசிக்கவும்.

- பலிபீடம் மற்றும் அதற்கு இணையான சொற்களை செவ்வக வடிவில் குறிக்கவும்.
- தூபம் என்று வருவதை இப்படி குறிக்கவும்.
- நேரத்தைக் குறிக்கும் சொற்களை கடிகார அடையாளத்தில் குறிக்கவும்.



தூப பீடம்

### கலந்துரையாடு

- தூபபீடம் குறித்தும் அதன் பயன்பாடு குறித்தும் என்ன அறிந்துகொண்டீர்கள்? இந்த பீடத்தில் தடை செய்யப் பட்டது எது?
- தூபம் என்று அடையாளமிட்ட குறிப்பிலிருந்து என்ன தெரிந்துகொள்கிறீர்கள்?

### உற்றுநோக்கு

பிரதான ஆசாரியன் மட்டுமே திரை வழியாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் (இதைக் குறித்து அடுத்த வாரத்தில் படிப்போம்) செல்ல முடியும், அதுவும் வருடத்தில் ஒரு முறை மட்டும். இது லேவியராகமம் 16 ல் சொல்லப் பட்டுள்ளது போல் பாவநிவிர்த்தி நாளன்று (யோம்கிப்புர்). கி.மு. 586 ல் பாபிலோனியர் தேவாலயத்தை இடித்து தரைமட்டம் ஆக்கும் வரை தேவ மகிமை மகாபரிசுத்த ஸ்தலத்தை மூடினது.

அடுத்து வருகிற வசனங்களில் யோம் கிப்புர், பாவநிவிர்த்தி நாளில் தூபம் காட்டும் இடத்தின் பங்கு என்ன என்பதை பார்க்கலாம்.

**தலைவர்:** லேவியராகமம் 16: 12-13 ஐ வாசிக்கவும்.

- குழுவினரை 'தூபம்' மற்றும் 'பலிபீடம்' என்ற வார்த்தைகளைக் குறிக்கச் சொல்லவும்.

### கலந்துரையாடு

- பீடத்திலுள்ள நெருப்புத்தணலைக்கொண்டு ஆசாரியன் என்ன செய்தார்? ஏன்?
- திரைக்குள் தூபம் கொண்டுபோகப்பட வில்லையென்றால் என்ன ஆகும்?
- பரிசுத்தமான தேவனை ஆராதிப்பதைக் குறித்து இதிலிருந்து என்ன கற்றுக்கொள்கிறோம்?

9. அதின்மேல் அந்நிய தூபத்தையாகிலும், தகனபலியையாகிலும், போஜனபலியையாகிலும் படைக்கவேண்டாம்; அதின்மேல் பானபலியை ஊற்றவும்வேண்டாம்.

10. வருஷத்தில் ஒருமுறை ஆரோன் பாவநிவாரணபலியின் இரத்தத்தினால் அதின் கொம்புகளின்மேல் பிராயச்சித்தம்பண்ணுவானாக; உங்கள் தலைமுறைதோறும் வருஷத்தில் ஒருமுறை அதின்மேல் பிராயச்சித்தம்பண்ணுவானாக; அது கர்த்தருக்கு மகா பரிசுத்தமானது என்றார்.

## லேவியராகமம் 16: 12-13

12. கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத்தணலினால் தூபகலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து,

13. தான் சாகாதபடிக்குத் தூபமேகமானது சாட்சிப்பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போடக்கடவன்.

## லூக்கா 1: 8-11

8. அப்படியிருக்க, அவன் தன் ஆசாரிய வகுப்பின் முறைப்படி தேவசந்நிதியிலே ஆசாரிய ஊழியம் செய்துவருகிற காலத்தில்,

9. ஆசாரிய ஊழிய முறைமையின்படி அவன் தேவாலயத்துக்குள் பிரவேசித்துத் தூபங்காட்டுகிறதற்குச் சீட்டைப் பெற்றான்.

10. தூபங்காட்டுகிற வேளையிலே ஜனங்களெல்லாரும் கூட்டமாய் வெளியே ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

**தலைவர்:** இந்த வசனத்தில் உள்ளவைகளை குழுவிலுள்ள ஒருவர் செய்துகாட்டினால் நன்றாய் இருக்கும்.

## உற்றுநோக்கு

ஜெபத்திற்கும் தூபவர்க்கத்திற்கும் உள்ள தொடர்பை புதிய ஏற்பாட்டில் உள்ள இரண்டு பகுதிகள் தெளிவுபடுத்துகிறது.

**தலைவர்:** லூக்கா 1: 8-11 ல் சகரியாவுக்கு அவன் மகன் யோவான் ஸ்நானகன் பிறப்பைக் குறித்து தேவன் பேசினபோது அவன் செய்துகொண்டிருந்ததைக் குறித்த விவரம். வெளிப்படுத்தல் 8: 3-4 வாசிக்கவும்.

- முன் குறித்ததுபோல் 'தூபத்தை' குறிக்கவும் ⇧
- ஜெபத்தை இப்படி குறிக்கவும்
- நேரத்தைக் குறிக்கும் சொற்களை கடிகார அடையாளத்தில் குறிக்கவும்.

## கலந்துரையாடு

- சகரியா என்ன செய்துகொண்டிருந்தார், ஏன்?

- அதே நேரத்தில் ஜனங்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

- வெளிப்படுத்தல் 8: 3-4 ல் இருந்து தூபம் மற்றும் ஜெபத்தை குறித்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- ஆராதனையைப் பற்றி என்ன உட்கருத்து கிடைத்தது?

**உற்றுநோக்கு**

கூடாரத்தில் உள்ள அனைத்துமே பரலோக அமைப்பின் சாயலில் இருந்தது. எனவே எல்லாமே பரிசுத்தமான தேவனை ஆராதிப்பதற்கான பிரதிபலிப்பாய் இருக்கிறது.

**தலைவர்:** எபிரேயர் 7: 24-25 வரை சத்தமாக வாசிக்கவும்.

- 'இயேசு' என்ற சொற்களை சிலுவை அடையாளத்தில் குறிக்கவும்.
- நேரத்தைக் குறிக்கும் சொற்களை கடிகார அடையாளத்தில் குறிக்கவும்.

- 'ஆகையால்' என்ற வார்த்தை முடிவுரைக்கு அடையாளமாக இருப்பதால் ∴ இப்படி மூன்று புள்ளிகளை அடையாளமிடவும்.

11. அப்பொழுது கர்த்தருடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலதுபக்கத்திலே நின்று அவனுக்குத் தரிசனமானான்.

## வெளிப்படுத்தல் 8: 3-4

3. வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்து பலிபீடத்தின்படியிலே நின்றான்; சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்கு கொடுக்கப்பட்டது.

4. அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று.

## எபிரேயர் 7: 24-25

24 இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத

ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்.

25. மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.

## சங்கீதம் 141: 2

என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும், என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது.

## வெளிப்படுத்தல் 5: 8

அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்து .

### கலந்துரையாடு

- இயேசு கிறிஸ்துவை பற்றி இந்த வசனங்களிலிருந்து என்ன தெரிந்துகொள்கிறோம்?
- நேரத்தை குறித்து என்ன கற்றுக்கொள்கிறோம்? தூபம் எவ்வளவு நேரத்திற்கு எரியவேண்டும் என்பதோடு இதை எப்படி ஒப்பிட முடியும்?
- இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தோடு ஒப்பிடும்போது தூபபீடம் எதற்கு அடையாளமாக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது?

### உற்றுநோக்கு

**தலைவர்:** சங்கீதம் 141: 2; வெளிப்படுத்தல் 5: 8; மற்றும் 1 தெசலோனிக்கேயர் 5: 17 ஐ வாசிக்கவும்.

- ஜெபத்துக்கான குறிப்புகளை இப்படி குறியிடவும் 
- தூபத்துக்கான குறிப்புகளை இப்படி குறியிடவும் 
- நேரத்தைக் குறிக்கும் சொற்களை கடிகார அடையாளத்தில் குறிக்கவும்.

### கலந்துரையாடு

- இந்த வசனங்களில் ஜெபத்திற்கும் தூபத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

- நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் ஆட்டுக்குட்டியானவரை பணிந்துகொள்வதன் மூலம், அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்?

- 1 தெசலோனிக்கேயர் 5:17 ல் உள்ள வசனம் ஒரு கட்டளை. இதை அன்றாட வாழ்க்கையில் எப்படி கடைபிடித்து கீழ்ப்படியவேண்டும்? இந்த கட்டளைக்கும், தூபம் எரிகிறதற்கும், இயேசு இப்பொழுது பிதாவின் வலது பாரிசத்திலிருந்து செய்துகொண்டிருக்கிற வேலைகளுக்கும் ஏதேனும் ஒற்றுமையை காண்கிறீர்களா?

- ஜெபம் மற்றும் ஆராதனையைப்பற்றி இந்த வசனத்திலிருந்து என்ன கற்றுக்கொள்கிறோம்?

பொற்கலசங்களையும் பிடித்துக் கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து:

**1 தெசலோனிக்கேயர் 5: 17**

இடைவிடாமல்

ஜெபம்பண்ணுங்கள்.

## சுருக்கவுரை

கூடாரத்தில் உள்ள பொருட்களான சமுகத்தப்ப மேஜை, பொன்குத்துவிளக்கு, மற்றும் தூப பீடத்திலிருந்து ஆராதனையைபற்றி என்ன தெரிந்துகொண்டீர்கள்? இவைகளில், எவை அதிகமாக ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும் என்று உங்களோடு பேசுகிறது?

**நாம் கற்றதை திரும்ப பார்ப்போம்:**

• இயேசுவே ஜீவ அப்பம்: நாம் இருக்கிற வண்ணமாகவே தேவனை ஆராதித்து, பிதாவுக்கும் குமாரனுக்கும் கனத்தை செலுத்தினால், தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமா? தேவனுடைய வார்த்தையில் இருக்கிற எல்லாவற்றையும் செய்ய நேரம் இருக்கிறதா? அப்படி இருந்தால் நீங்கள் உண்மையோடு தேவனை ஆராதிக்கிறீர்களா? நீங்கள ஆராதனைக்கு எப்பொழுது செல்லுகிறீர்கள்? தேவ வார்த்தைக்கு ஆராதனையில் எந்த இடம் கொடுக்கப்படுகிறது?

• இயேசுவே மெய்யான ஒளி: நீங்கள் எங்கே நடக்கிறீர்கள்? அவர் நடந்த வழியில் நடக்கிறீர்களா? அல்லது இருட்டில் தள்ளாடுகிறீர்களா? உங்கள் பாதை நீங்கள் தேவன்மேல் வைத்திருக்கும் பயத்தை, மரியாதையை, நம்பிக்கையை சாட்சி கொடுக்கிறதா? நீங்கள் உண்மையான ஆராதனை வீரர் என்று காட்டுகிறதா?

• இயேசுவே நம் பிரதான ஆசாரியன்: நமக்காக பரிந்து பேசுகிறவர்: வாழ்க்கையின் போராட்டமான, இக்கட்டான மற்றும் கஷ்டமான நேரங்களில் இயேசு அந்த நேரத்தில் நமக்காக பரிந்துபேசிக்கொண்டு இருக்கிறார் என்று நினைவு இருக்கிறதா? நீங்கள் எப்போதும் அவரோடு உறவில் இருக்கிறீர்களா- ஜெபத்தினால்? நீங்கள் எல்லாவற்றையும் தேவனோடு பேசி, அவருடைய உதவி மற்றும் ஆலோசனை கேட்டு தேவனை ஆராதிக்கிறீர்களா? அவர் எப்போதும் உங்கள் மனதில் உள்ளாரா?

ஆசாரியனுடைய வழியில் தினமும் நடக்கிறீர்களா? இவ்வாரப் பகுதியிலிருந்து உங்கள் வாழ்க்கையில் என்ன மாற்றங்கள் செய்யவேண்டும் என்று தெரிகிறது?

**தலைவர்:** குழுவோடு கூடாரத்தில் உள்ள பொருட்களான சமுகத்தப்ப மேஜை, தங்க குத்துவிளக்கு, மற்றும் தூப பீடம் உண்மையான ஆராதனையோடு எப்படி சம்மந்தப்படுகிறது என்று பேசவேண்டும். இயேசு ஒளியாக, ஜீவஅப்பமாக, நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறதற்காக அவருக்கு நன்றி செலுத்தி ஜெபத்தோடு கூடாரத்திற்குள் பிரவேசியுங்கள்.

# வாரம் ஐந்து

கடந்த வாரம், பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள பொருட்கள் எப்படி இயேசுவை பிரதிபலிக்கிறது என்றும், பரிசுத்தமான தேவனை எப்படி ஆராதிக்க வேண்டும் என்று பார்த்தோம்.

- இயேசுவே ஜீவ அப்பம், நாம் அவருடைய வார்த்தையை உட்கொள்ள வேண்டும்.

- இயேசுவே ஒளி, நாம் அவருடைய ஒளியிலே வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இந்த உலகத்தில் நடந்து, ஜனங்கள் நம்முடைய நல்ல கிரியையை பார்த்து பரலோகில் இருக்கும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும்.

- இயேசு நமக்காக பரிந்து பேசுகிறவர், எப்போதும் நமக்காக ஜெபித்துகொண்டிருப்பவர். நம்மால் தாங்கி கொள்ள முடியாத சோதனையோ, பரீட்சையோ என்று ஒன்றும் இல்லை, ஏனென்றால் இயேசுவின் பரிந்துபேசுதல் நமக்கு, அவருடைய "தப்பிக்கும் வழியை" காட்டும். சுகந்த வாசனையான தூபம் எப்போதும் எரிவது போல, நாம் எப்போதும் ஜெபித்து கொண்டே சுகந்த வாசனையாக இருக்கவேண்டும்.

இந்த அன்பான தேவன், ஆராதனையின் முக்கிய அங்கமாய் இருக்கிறார். இந்த வாரம் கூடாரத்தில் உள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தை குறித்து பார்க்கப்போகிறோம். இங்கே தான் தேவன் மேகத்தில் பிரசன்னமாய் தங்கி இருந்தார். இந்த ஸ்தலத்தில் தான் தேவன் மனிதனை சந்தித்து பேசினார். இந்த குறிப்பிட்ட இடத்தில் தான் தேவன் இறங்கி வந்து பேசினார்.
இவர் எப்படிப்பட்ட தேவன்!நாம் அவரிடத்தில் செல்ல முடிய வில்லை, எனவே அவரே நம்மை தேடி வந்தார்.

## யாத்திராகமம் 26: 31-33

31. இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சு நூலுமான இவற்றால் ஒரு திரைச்சீலையை உண்டுபண்ணக்கடவாய்; அதிலே விசித்திரவேலையால் செய்யப்பட்ட கேருபீன்கள் வைக்கப்படவேண்டும்.

32. சீத்திம் மரத்தினால் செய்து, பொன் தகட்டால் மூடப்பட்ட நாலு தூண்களிலே அதைத் தொங்கவிடு; அந்தத் தூண்கள் நாலு வெள்ளிப் பாதங்கள்மேல் நிற்கவும், அவைகளின் கொக்கிகள் பொன்னினால் செய்யப்படவும் வேண்டும்.

33. கொக்கிகளின்கீழே அந்தத் திரைச் சீலையைத் தொங்கவிட்டு, சாட்சிப்பெட்டியை அங்கே திரைக்குள்ளாக வைக்கக்கடவாய்; அந்தத் திரைச்சீலை பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிரிவை உண்டாக்கும்.



திரைச் சீலை

### உற்றுநோக்கு

வரைபடத்தில் இருந்து, கூடாரத்தில் திரை இருக்குமிடத்தை கவனிக்கவும். இது அனைத்தும் பரலோகிலுள்ள கூடாரத்திற்கு ஒப்பாக செய்யப்பட்டது என்பதை நினைவுகூறவும்.




திரைச் சீலை

**தலைவர்:** யாத் 26:31-33-ஐ வாசிக்கவும்

- குழுவினரை 'திரை' என்ற சொல்லை குறிக்கச் சொல்லவும்.

### கலந்துரையாடு

- "திரை" என்ற குறிப்பிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- திரையின் நோக்கம் என்ன?
- சந்திப்பு கூடாரத்தில் (Tent of meeting) திரைக்கு இருபுறமும் என்ன இருந்தது?

**உற்றுநோக்கு**

கூடாரத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் இயேசு கிறிஸ்துவின் நிழலோட்டமாய் இருந்தது. திரை நமக்கு எதை சித்திரிக்கிறது?

**தலைவர்:** எபி 10: 19-20 -ஐ வாசிக்கவும். மகா பரிசுத்த ஸ்தலத்தை இந்த பகுதியில் பரிசுத்த இடம் என்று எழுதி இருக்கிறது.

- 'இயேசு' என்ற சொற்களை சிலுவை அடையாளத்தில் குறிக்கவும்.
- 'திரை' என்ற சொல்லை குறிக்கவும்

**கலந்துரையாடு**

- எபிரேயர் 10-ன் படி, திரை எதை குறிக்கிறது?

- திரையில் வழியாய் உள்ளே செல்லும் போது நாம் எங்கு நுழைகிறோம்? அங்கு எப்படி நுழைய வேண்டும்?

- இது எப்படிப்பட்ட வழி?

## எபிரேயர் 10: 19-20

19. ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்,

20. அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,

## யாத்திராகமம் 25: 10-15, 17-22

10. சீத்திம் மரத்தினால் ஒரு பெட்டியைப் பண்ணக்கடவர்கள்; அதின் நீளம் இரண்டரை முழமும், அதின் அகலம் ஒன்றரை முழமும், அதின் உயரம் ஒன்றரை முழமுமாயிருப்பதாக.

11. அதை எங்கும் பசும்பொன்தகட்டால் மூடுவாயாக; நீ அதின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் அதினால் மூடி, அதின்மேல் சுற்றிலும் பொன்னினால் திரணையை உண்டாக்கி,

12. அதற்கு நாலு பொன் வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நாலு மூலைகளிலும் போட்டு, ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும், மறுபக்கத்தில் இரண்டு வளையங்களும் இருக்கும்படி தைத்து,

13. சீத்திம் மரத்தால் தண்டுகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,

இது எப்படி வாழ்விற்கான புது வழி என்று தெரிவதற்கு, நாம் உடன்படிக்கை பெட்டியையும் பின்பு பாவ நிவர்த்தி நாளையும் (யோம் கிப்பூர்) குறித்து கற்றுக்கொள்ள வேண்டும்.



உடன்படிக்கை பெட்டி மற்றும் கிருபாசனம்

### உற்றுநோக்கு

பக்கம் 59 ல் உள்ள ஆசரிப்புக் கூடாரத்தின் வரைபடத்தை பார்க்கவும், உடன்படிக்கை பெட்டி ஆசரிப்புக் கூடாரத்தில் எங்கு உள்ளது என்று கவனிக்கவும்.

பெட்டியின் மேலே கிருபாசனம் இருந்தது, அதற்கு மேலே தங்கத்தினால் செய்யப்பட்ட இரண்டு கேருபீன்கள், இருபுறமும் இருந்தது.

**தலைவர்:** யாத் 25:10-15,17-22 -ஐ சத்தமாக வாசிக்கவும் இந்த வசனங்களில் பேசுகிறவர் தேவனாயிருக்கின்றபடியால்,

- 'நான்' என்ற சொல்லை முக்கோண வடிவில் இப்படி குறிக்கவும்.
- 'பெட்டி' என்ற சொல்லை இப்படி குறிக்கவும். ☐
- இரத்தத்தை குறிக்கும்படி 'கிருபாசனத்தை' குறிக்கும் ஒவ்வொரு குறிப்பையும் இப்படி அடையாளமிடவும்.



உடன்படிக்கை பெட்டி

## கலந்துரையாடு

- "உடன்படிக்கைப் பெட்டி" என்ற குறிப்பிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள்?
- ஆசாரியர்கள் பெட்டியை தூக்கி செல்வதற்காகத்தான் வளையங்கள் இருந்தது. கம்பங்கள் எப்போது வளையத்துக்குள் இருக்க வேண்டும்?
- கிருபாசனத்தை பற்றி நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள்?
- தேவனைக் குறிக்கின்ற 'நான்' என்ற குறிப்பிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள்?
- பெட்டி காலியாய் இருந்ததா?

14. அந்தத் தண்டுகளால் பெட்டியைச் சுமக்கும்படி, அவைகளைப் பெட்டியின் பக்கங்களிலிருக்கும் வளையங்களிலே பாய்ச்சக்கடவாய்.

15. அந்தத் தண்டுகள் பெட்டியிலிருந்து கழற்றப்படாமல், அதின் வளையங்களிலே இருக்கவேண்டும்.

17. பசும்பொன்னினாலே கிருபாசனத்தைப் பண்ணுவாயாக; அது இரண்டரை முழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமாய் இருக்கக்கடவது.

18. பொன்னினால் இரண்டு கேருபீன்களைச் செய்வாயாக; பொன்னைத் தகடாய் அடித்து, அவைகளைச் செய்து, கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் வைப்பாயாக.

19. ஒரு புறத்து ஓரத்தில் ஒரு கேருபீனையும் மறுபுறத்து ஓரத்தில் மற்றக் கேருபீனையும் பண்ணிவை; அந்தக் கேருபீன்கள் கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும் அதனோடே ஏகவேலையாயிருக்கும்படி, அவைகளைப் பண்ணக்கடவாய்.

20.அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடுகிறவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ளவைகளுமாய் இருக்கக்கடவது; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவைகளாயிருப்பதாக.

21.கிருபாசனத்தைப் பெட்டியின்மீதில் வைத்து, பெட்டிக்குள்ளே நான் உனக்குக் கொடுக்கும் சாட்சிப்பிரமாணத்தை வைப்பாயாக.

22.அங்கே நான் உன்னைச் சந்திப்பேன்; கிருபாசனத்தின்மீதிலும் சாட்சிப்பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலும் இருந்து நான் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப் போகிறவைகளையெல்லாம் உன்னோடே சொல்லுவேன்.

## உற்றுநோக்கு

உடன்படிக்கை பெட்டியின் உள்ளே என்ன வைக்க வேண்டும் என்று அடுத்த பகுதி நமக்கு கூறுகிறது. **தலைவர்:** பக்கம் 61 ல் உள்ள எபிரேயர் 9:3-4ஐ வாசிக்கவும்.

- 'பெட்டி'யைக் குறிக்கும் ஒவ்வொரு குறிப்பையும் அடையாளமிடவும்.
- 'திரை'யைக் குறிக்கும் ஒவ்வொரு குறிப்பையும் அடையாளமிடவும்.

## உட்கருத்து

கிரேக்கத்தில், எபிரேயர் 9: 4 ன்படி பலிபீடத்திற்கு தூபகலசம் என்று அர்த்தம். பாவ நிவர்த்தி நாள் அன்றுதான் பொன் தூபகலசம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு செல்லப்படும். பரிசுத்த ஸ்தலத்திலுள்ள தூப பீடத்திலிருந்து தூபம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு செல்லப்பட வில்லையென்றால் ஆசாரியன் இறந்துவிடுவார். தூபபீடம் திரைக்கு முன்பாக இருக்க வேண்டும் என்று யாத்திராகமம் 31:11, மற்றும் லேவியராகமம் 16:12-13 ல் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

## கலந்துரையாடு

யாத்திராகமத்தில் சில பொருட்கள் உடன்படிக்கை பெட்டியில் வைக்கப்பட்டது என்று வாசிக்கிறோம்.

• உடன்படிக்கை பெட்டி எங்கே வைக்கப்பட்டது?

• எபிரேயரில் சொன்னபடி என்ன என்ன பொருட்கள் பெட்டிக்குள் வைக்கப்பட்டது? குழுவினரை 1,2,3 என்று இந்த மூன்று பொருட்களுக்கும் குறிப்பிட சொல்லவும்

## உற்றுநோக்கு

மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் வருடத்தின் ஒரு முறை, அதாவது பாவ நிவர்த்தி நாள் (யோம் கிப்புர்) அன்று மட்டும் தான் பிரவேசிப்பார். இது யூத காலண்டரில் 7வது மாதம் 10வது நாள் அன்று நடைபெறும். உலகம் எங்கிலும் உள்ள யூதர்கள் இந்த உயர்ந்த மற்றும் பரிசுத்தமான நாளை மிகவும் விமரிசையாக கொண்டாடினாலும் லேவியராகமம் 16ல் சொன்னபடி செய்வதில்லை, காரணம் இதுவரை அவர்களுக்கு ஆலயம் இல்லை.

## எபிரேயர் 9: 3-4

3. இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது.
4. அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன.

## லேவியராகமம் 16: 11-17

11. பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவநிவாரணத்துக்கான காளையைக் கொண்டுவந்து, அதைக் கொன்று,

12. கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத்தணலினால் தூபகலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து,

13. தான் சாகாதபடிக்குத் தூபமேகமானது சாட்சிப்பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போடக்கடவன்.

**தலைவர்:** லேவி 16: 11-17 வரை வாசிக்கவும்

- முன்பு குறித்ததுபோல நீங்கள் கிருபாசனத்தை அடையாளமிடவும்.
- ஆரோன் என்று வரும் இடங்களில் கோடிட்டு கொள்ளவும்
- இரத்தம் இப்படி குறிக்கவும் ∴
- பாவத்திற்கு 'பா' என்று குறிக்கவும்
- பாவநிவர்த்திக்கு அரை வட்டத்தில் குறிக்கவும்
- நேரத்தைக் குறிக்கும் சொற்களை கடிகார அடையாளத்தில் குறிக்கவும்.

### கலந்துரையாடு

- லேவி 16: 11-14 -ல் ஆரோன் தனக்கு என்ன செய்கிறார்?இதன் முறைகளை விவாதிக்கவும் அல்லது ஒருவரை பாவநிவிர்த்தி நாளன்று கிருபாசனத்தண்டை ஆசாரியன் செய்வதை நடித்து காட்ட கூறவும்.

- லேவி 16:15-17-ல் உள்ளதுபோல் பிரதான ஆசாரியனாக ஆரோன் ஜனங்களுக்கு என்ன செய்கிறார்?

- பாவநிவர்த்தி என்று அடையாளமிட்டதிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள்? பாவநிவர்த்தி எதற்கு என்றும், யாருக்காக எப்படி செய்யப்படுகிறது என்றும் கவனியுங்கள்.

- இப்படி செய்கிற பாவ நிவர்த்தி, ஜனங்களின் பாவங்களை ஆயுள் முழுவதுக்கும் நிவர்த்தி செய்கிறதா? நீங்கள் படித்த பகுதி என்ன சொல்கிறது.

- மகா பரிசுத்த ஸ்தலத்தில் அல்லது சந்திப்பு கூடாரத்தில்பிரதான ஆசாரியனோடு யாராவது இருந்தார்களா? பாவநிவிர்த்தி நாளன்று எப்பொழுது அவர் இதை செய்தார்?

14. பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கிருபாசனத்துக்கு முன்பாக ஏழுதரம் தன் விரலினால் தெளிக்கக்கடவன

15. பின்பு ஜனத்தினுடைய பாவநிவாரணபலியான வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தைத் திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து, காளையின் இரத்தத்தைத் தெளித்ததுபோல, அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளித்து,

16. இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காகப்

பிராயச்சித்தஞ்செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற்காகவும் அப்படியே செய்யக்கடவன்.

17.பாவநிவிர்த்தி செய்யும்படி அவன் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேல் சபையார் அனைவருக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, வெளியே வருமளவும் ஆசரிப்புக் கூடாரத்தில் ஒருவரும் இருக்கலாகாது.

## எபிரேயர் 9: 11-12, 24-25

11.கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும்,

## உற்றுநோக்கு

நம் மகா பிரதான ஆசாரியனாய், இயேசு கிறிஸ்து என்ன செய்தார்?

**தலைவர்:** எபிரேயர9:11-12, 24-25 ஐ சத்தமாக வாசிக்கவும்

- கிறிஸ்து (மேசியா) சிலுவைக்குறியில் குறிக்கவும்
- இரத்தம் குறிக்கவும்
- நேரத்தைக் குறிக்கும் சொற்களை கடிகார அடையாளத்தில் குறிக்கவும்.

## கலந்துரையாடு

- இயேசு கிறிஸ்து என்று குறித்ததிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொள்கிறீர்கள்?

- இயேசு எங்கே நுழைந்தார்? அவர் எப்படி நுழைந்தார்?

- தம்மை தியாகமாய் கொடுத்ததின் நிமித்தம் அவருக்கு கிடைத்ததுஎன்ன? எவ்வளவு கால மட்டும்?

- இதை வாசிக்கும் போது, இயேசுவை பணிந்து கொள்ளவேண்டும், ஆராதிக்க வேண்டும், நேசிக்க வேண்டும், நம் அனைத்தையும் அவருக்கே கொடுக்க வேண்டும் உங்களுக்கு என்று தோன்றுகிறதா?

## உற்றுநோக்கு

**தலைவர்:** எபிரேயர் 2:17, 1 யோவான் 2: 1-2 ஐ சத்தமாக வாசிக்கவும்

- 'இயேசு கிறிஸ்து' நம் பிரதான ஆசாரியன் என்ற சொற்களை சிலுவை அடையாளத்தில் குறிக்கவும்.
- நிவிர்த்தி என்ற சொல்லைபாவநிவிர்த்திக்கு குறித்ததுபோல் குறிக்கவும்
- பாவம் என்ற சொல்லை குறிக்கவும்

12. வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.

24. அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்ட தாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்.

25. பிரதானஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்தஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்க வில்லை.

## எபிரேயர் 2: 17

அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான

ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது.

## 1 யோவான் 2: 1-2

1. என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.

2. நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.

## உட்கருத்து

1 யோவான் 2:2 ல், நிவர்த்தி என்ற சொல் கிரேக்கத்தில் 'ஹிலாமோஸ்'' என்பதாகும். அது பாவம் மூடப்பட்டு மன்னிக்கப்படுவதைக் குறிக்கிறது. நம்முடைய பாவங்களுக்கான முழு கிரயத்தையும் இயேசு செலுத்திவிட்டதால், தேவனுடைய பரிசுத்தம் திருப்தி செய்யப்பட்டது. நம் பாவத்தின் பரிகாரியும், நம் கிருபாசனமுமாகிய இயேசு தன்னையே முழுமையான கிரயமாக செலுத்திவிட்டதால், எக்காலத்திற்கும் இது போதுமானதாயிற்று.

### கலந்துரையாடு

- நம்முடைய பாவங்களுக்காக இயேசு என்ன செய்தார்?
- பிதாவின் முன்பாக நமக்காக இயேசு என்னவாக இருக்கிறார்?
- இந்த வசனங்களின்படி, யாருடைய பாவங்களுக்காக இயேசு நிவர்த்தி செய்தார்?
- இது நல்ல செய்தியா? தொலைந்துபோன உலகிற்காக, இது நற்செய்தியா? இப்படி ஒரு நல்ல தேவனை ஆராதிக்க வேண்டும் என்று தோன்றுகிறதா? நம்புகிற யாவருக்கும் மன்னிப்பு உண்டு.

## உற்றுநோக்கு

இது ஆச்சரியமல்லவா? ஆனால் இன்னும் உண்டு, காத்திருங்கள்!

**தலைவர்:** மத்தேயு 27: 51, எபிரேயர் 10:19-23ஐ சத்தமாக வாசிக்கவும்.

- இயேசு என்ற ஒவ்வொரு குறிப்பையும் அடையாளமிடுங்கள்.
- திரை என்ற ஒவ்வொரு குறிப்பையும் அடையாளமிடுங்கள்.
- சகோதரர் என்ற ஒவ்வொரு குறிப்பையும் வட்டமிடுங்கள்.

மத்தேயுவில் வரும் வசனங்கள் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளை பற்றி கூறுகிறது, எபிரேயரில் இயேசு மரித்தபோது திரை என்ன ஆனது என்பதன் முக்கியத்துவத்தைக் கூறுகிறது.

### உட்கருத்து

ஜோசபஸ் என்ற யூத சரித்திர ஆசிரியர் இப்படியாக எழுதி இருக்கிறார், ஆலயத்திலுள்ள திரை மிகவும் கணமாய் இருந்ததாம். அதை கிழிப்பதற்கு இரண்டு குழுவாக எருதுகள் எதிர் திசையில் இழுக்க வேண்டுமாம். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் திரை சீலை மேலிருந்து கீழ் இரண்டாக கிழிந்தது.

### மத்தேயு 27: 51

ஆப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது.

### எபிரேயர் 10: 19-23

19. ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்,

20. அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,

21. தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்,

22. துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்

23. அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.

**கலந்துரையாடு**

இந்தவார ஆரம்பத்தில் எபிரேயர் 10: 20 ல் திரை இயேசுவின் சரீரத்திற்கு அடையாளமாய் இருக்கிறது என்று பாாத்தோம்.

- உடன்படிக்கை பெட்டி தேவனுடைய சிங்காசனத்தை குறிக்கிறது, மற்றும்ஆலயத்தில் உள்ள திரை ஆசாரியன் பாவ நிவர்த்தி நாளை தவிர,மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல முடியாமல் தடுத்தது.இப்படி இருக்க திரை மேலிருந்து கீழ் இரண்டாக கிழிந்ததிலிருந்து தேவன் சொல்ல நினைக்கிறது என்ன?
- யோவா 14:6 -ல் நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னைத் தவிர ஒருவனும் தேவனிடத்தில் வரான் என்று இயேசு கூறுகிறார். திரை இரண்டாக கிழிந்ததற்கு இந்த வசனம் எவ்வாறு ஒத்துப்போகிறது?

- சகோதரராகிய நமக்கு இது எதை குறிக்கிறது?

- தேவனுடைய பிள்ளையாய், பாவநிவிர்த்தி நாள் தவிர பிரதான ஆசாரியன் செல்ல கூடாத எந்த இடத்துக்கு நாம் செல்ல முடியும்?நமக்கு ஏன் இவ்வளவு பெரிய பாக்கியம்? இது நம்மை என்ன செய்ய தூண்டுகிறது?

- ஆசரிப்புக் கூடாரம் மற்றும் ஆராதனையைக் குறித்து நீங்கள் கற்றுக் கொண்டவைகளோடு எபி. 10:21-22 எப்படி பொருந்துகிறது?

## சுருக்கவுரை

இயேசு கிறிஸ்துவால் முடிக்கப்பட்ட வேலையின் நிமித்தம் என்றென்றைக்குமாய்நாம் கழுவப்பட்டு இருக்கிறோம். இதனால் தேவையுள்ள நேரத்தில் நாம் தேவனுடைய சிங்காசனத்தை நெருங்கி உதவிபெறும் கிருபையும் கிடைக்கிறது.

இதற்கு மேலாக ஒருவர் என்ன கேட்க முடியும்? நாம் பாவிகளாய், நம்பிக்கையற்று, தேவனுக்கு விரோதியாய் இருந்தபோதிலும், நம்மை நேசித்து தன்னையே நமக்காய் கொடுத்த தேவனின் நேச குமாரன் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் மகா பரிசுத்தமான தேவனின் சிங்காசனத்தண்டை நாம் எப்போதும் எந்நேரமும் செல்லுகிற பாக்கியம் கிடைத்திருக்கிறது.

இப்படி இருக்க நாம் என்ன செய்ய வேண்டும் - நம்மையே ஜீவ பலியாய், பரிசுத்தமாய் தேவனுக்கு உகந்த பலியாக கொடுப்பதே புத்தியுள்ள ஆராதனை.

தேவனுக்கு பிரியமானவர்களே இந்த உண்மைகள் அனைத்தையும் ஜெபத்திலே தேவனுக்கு நன்றி செலுத்தி, ஆராதித்து, கற்று கொண்ட அனைத்தும் நமக்கு பிரயோஜனமாய் இருந்ததற்காக அவரை ஸ்தோத்தரியுங்கள்.

மற்றவர்கள் ஜெபிக்கும் போது, நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் மனம்திரும்பி, சிந்தனை மாறி அவரை ஏற்றுக்கொள்ள இதுவே ஏற்ற நேரம். நீங்கள் இரட்சிக்கப்பட்டு மறுபடி பிறந்து, தேவனுடைய குடும்பத்தில் சேர விரும்பினால், நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்கள் என்று சொல்லி, அவருடைய பிள்ளையாக மாறுங்கள். சிலுவையை போல் விரிவாய் கரங்கள்நீட்டி காத்து இருக்கிறார்.

*ஆகையால்,வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்.*

நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத

பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

**எபிரேயர் 4: 14-16**

## வாரம் ஆறு

புது உடன்படிக்கையில் இயேசு கிறிஸ்து நம் நடுவராக வருவதற்கு முன்பு,இஸ்ரவேல் ஜனங்கள் பண்டிகைகள் கொண்டாடி,எருசலேம் தேவாலயத்தில் பலிகள் செலுத்தி தேவனை ஆராதித்தார்கள். கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாய் நாம் எப்போது எங்கே தேவனை ஆராதிக்க வேண்டும்? எந்தவிதத்தில் அதனை செய்யவேண்டும்?

இதையே நாம் இந்த கடைசி வார பாடத்தில் பார்க்கலாம்.

**உற்றுநோக்கு**

இந்த வாரம் நாம் சமாரிய ஸ்திரீயை பற்றி பார்ப்போம். கி.மு. 722ல் அசீரியர் வடக்கு இஸ்ரவேலை சிறை பிடித்தபோது, யூதர்கள் புறஜாதியான அசீரியரோடு திருமணம் செய்தபோது பிறந்தவர்கள் தான் சமாரியர். இவர்கள் தகுதியற்றவர்கள் என்று கருதி அசீரியர் இவர்களை சிறை கைதிகளாக கொண்டு செல்லவில்லை.

இயேசுவின் நாட்களில், யூதர்கள் சமாரியர்களை தாழ்ந்த இனமாக கருதி வெறுத்தார்கள். பாதி யூதர்களாகவும் பாதி புறஜாதிகளாகவும் இருந்த சமாரியர்கள் தங்கள் இஸ்ரவேல் வம்ச வரலாற்றை சரியாக கூற முடியவில்லை. யூதர்கள் அவர்களை ஒதுக்கி வைத்திருந்தார்கள். எனவே எருசலேமிற்கும் கலிலேயாவிற்கும் நடுவில் இருக்கும் சமாரியா வழியாக பயணம் செய்வதுகூட இல்லை.

இப்படி யூதர்களால் தள்ளப்பட்ட சமாரியர், கெரிசீம் மலையில் தங்களுக்கென்று ஆலயம் கட்டி, ஆராதனை முறைகளை கடைபிடித்தார்கள்.

எருசலேமிலிருந்து கலிலேயா செல்வதற்கு இயேசுவும், அவருடைய சீடர்களும் வேறு இரண்டு வழியாக சென்றிருக்கலாம். ஆனால் இயேசு சமாரியா வழியாகவே செல்ல தீர்மானித்தார். சீடர்கள் உணவு வாங்க ஊருக்குள் சென்றபோது, இயேசு யாக்கோபு கிணற்றண்டையில் அவர்களுக்காக காத்திருந்தார். அவர் கிணற்றண்டை உட்கார்ந்து இருக்கையில், ஒரு சமாரிய ஸ்திரி தண்ணீர் எடுக்க வந்தாள்.

## யோவான் 4: 9-29

9. யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்.

10. இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்.

11. அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்.

அவள் நினைத்தற்கும் மேலாக இயேசுவுக்கு அவளை குறித்து தெரிந்திருந்தது.

அவள் கிணற்றின் அருகில் வந்த உடன் இயேசு குடிக்க தண்ணீர் கேட்டார்.

**தலைவர்:** யோவா 4: 9-29 வரை சத்தமாக வாசிக்கவும். இதை நீங்கள் வாசிக்கின்ற வேளையில், இந்த வசனங்களில் - அவர்களது சந்திப்பின் ஆரம்பமுதல் உள்ள சுற்று சூழலில் நிகழும் மாற்றங்களைக் கவனிப்பதில் குழு கவனமாக இருக்க வேண்டும்

- இயேசு கொடுக்கின்ற **தண்ணீர்** என்ற குறிப்புகளை இப்படி 〰〰 குறிக்கவும்
- **ஆராதனையைக்** குறிக்கும் ஒவ்வொரு குறிப்பையும் 'ஆ' என்று குறிக்கவும்.

### உட்கருத்து

இந்த பகுதியில் ஆராதனை என்பதற்கு கிரேக்க சொல் 'பிரொஸ்குனியோ'. இதற்கு அர்த்தம் -கையை முத்தமிட்டு, முழங்கால்கள் மடக்கி அல்லது தரையில் சாஸ்டாங்கமாய் விழுவது. இதற்கு மரியாதை காட்டுவது அல்லது கீழ்படிவது, கனம் செலுத்துவது அல்லது தெய்வீகமான ஒன்றுக்கு பயப்படுவது என்றும் பொருள்படும்.

## கலந்துரையாடு

**தலைவர்:** இந்தக் கேள்விகள், நீங்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் எப்படி ஆராதிக்க வேண்டும் என்று அறிய உங்கள் கலந்துரையாடல் துவக்குவதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளன. உங்கள் குழுவிற்கு ஏற்றவகையில் அவைகளை பயன்படுத்துங்கள்.

- ஆராதனை குறித்த வசனங்களிருந்து என்ன கற்று கொள்ளுகிறீர்கள்? (ஒவ்வொரு வசனமாய் பார்க்கவும்)
- உன்னுடைய தாகத்தை தீர்க்கக்கூடிய தண்ணீர் என்று இயேசு சொன்னபோது, சமாரிய ஸ்திரீயின் நினைவு எதில் நோக்கமாய் இருந்தது? எப்படிப்பட்ட தண்ணீரின்மேல்?
- ஜீவ தண்ணீர் என்று சொல்லும்போது இயேசு எதை குறித்து பேசினார்? சாதாரண தண்ணீரா? அல்லது ஆவிக்குரிய தண்ணீரா?

12. இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்.

13. இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்.

14. நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்.

15. அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்.

16. இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்.

17. அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான்.

18. எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்.

19. அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.

20. எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள்.

21. அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும்

- இயேசு ஆராதனை பற்றி பேசினபோது சமாரிய ஸ்திரீ எதை பற்றி சிந்தித்தாள்- ஆவிக்குரிய ஆராதனையையா அல்லது சரீரப்பிரகாரமான ஆராதனையையா? இதை நீங்கள் எப்படி அறிவீர்கள்?

- ஒரு வேளை வருகிறது அப்பொழுது நீங்கள் தேவனை கெரிசீம் மற்றும் எருசலேமில் ஆராதிக்கமாட்டீர்கள் என்று இயேசு சொன்னபோது எந்த காலத்தை குறித்து சொன்னார்? திரைச்சீலை கிழிந்து தேவனை ஆராதிக்கவும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கவும் ஒரு புது ஜீவவழி கிடைக்கும் என்றும் எருசலேம் தேவாலயம் இடிக்கப்படும் என்றும் இயேசுவுக்கு தெரியும். மேலும் எருசலேம் மற்றும் தேவாலயம் இடிக்கப்படும் என்றும் அவர் முன் சொன்னார். இது கி.பி. 70ல் நடந்தது. அன்றிலிருந்து அங்கு ஆலயம் இல்லை. அப்படி என்றால், எங்கே எப்போது அவர்கள் ஆராதிப்பார்கள்?

- இவ்விடத்தில் தேவனை ஆவியோடுஆராதித்தல் என்பது என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்? சமாரிய ஸ்திரீ தேவனை ஆவியோடு ஆராதித்தாளா? அவளுடைய நோக்கம் எதில் இருந்தது?

- பழைய ஏற்பாட்டில் சொன்னபடி எருசலேமில் சமாரியர் ஆராதிக்கவில்லையெனில்,இவர்களுடைய ஆராதனை உண்மையான ஆராதனையா?(உதாரணத்திற்கு, ஆராதனையை பற்றி தேவாலயம் எருசலேமில் கட்டப்படவேண்டும் என்று தேவன் சில குறிப்பிட்ட கட்டளைகள் கொடுத்திருந்தார்).ஆனால், சமாரியர் கெரிசீம் மலையில் தேவனை ஆராதித்தார்கள், ஏனென்றால், அவர்கள் வேதாகமத்தின் முதல் 5 புத்தகங்களாகிய தோராவையே தேவனுடைய வார்த்தையாய் பின்பற்றினார்கள், யூதர்கள் முழு பழைய ஏற்பாட்டையும் பின்பற்றினார்கள்).

எருசலேமிலும்மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது.

22. நீங்கள் அறியாததைக் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது..

23. உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.

24. தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

25. அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.

26. அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.

27. அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை.

28. அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி:

29. நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்.

- புது உடன்படிக்கையின்படி, இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளுக்கு தேவன் ஆராதனைக்கு குறிப்பிட்ட ஆராதனை முறைமை கொடுத்திருக்கிறாரா? குறிப்பிட்ட இடம் உண்டா? யோவான் 4ன் படி நாம் எவ்வாறு தேவனை ஒழுங்காய்ஆராதிக்க வேண்டும்?
- யோவா 4: 24ன்படி, யார் தேவன்?
- தேவனை உண்மையோடு ஆராதித்தல் என்றால் என்ன? உண்மையை ஒருவன் எங்கே காண முடியும்?

## உற்றுநோக்கு

உண்மையான ஆராதனை என்பது வெளிபிரகாரமான, சடங்காசாரம் அல்ல, அது ஆவிக்குரியது. சரீரபிரகாரமானதும், ஆத்மீக பூர்வமானதும் அல்ல, எனிலும், இவ்விரண்டும் ஆராதனையில் பங்கு எடுக்கிறது. ஆனால், மனிதனின் ஆவிதான் ஆராதனையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பிலிப்பியர் 3: 2,3 ல் வெளியரங்கமான சடங்குகளாய், மாம்சத்திலான விருத்தசேதனத்தை கண்டிக்கிறார், எரேமியா 31 ல் புது உடன் படிக்கையின் படி உண்மையான விருத்தசேதனம், இதயத்தில் நடைபெற வேண்டும்.

**தலைவர்:** பிலிப்பியர் 3:2-3ஐ சுத்தமாக வாசிக்கவும்

- ஆராதனை என்ற சொல்லை குறிக்கவும்

## கலந்துரையாடு

- இவ்விரண்டு வசனங்களில் உள்ள எதிர்மறையான கருத்துக்கள் யாவை?
- 3ம் வசனத்தில், ஆவியான தேவனை ஆராதிப்பதிலும், இயேசு கிறிஸ்துவை மகிமை படுத்துவதிலும் நம்முடைய நம்பிக்கையை வைப்பதிலும் எங்கே மாறுபட்ட கருத்து உள்ளது?
- நாம் தனிப்பட்ட முறையில் தேவனை ஆராதிக்கும்போது, நம் நம்பிக்கையை எதில் வைக்கிறோம்? இது மாம்சத்தில் உண்டான உணர்ச்சிகளின் அனுபவமா, அல்லது உள்ளத்திலே உள்ளார்ந்த மனிதன் தேவனை கனப்படுத்தி, கீழ்ப்படிந்து, அவரோடு உறவாட வேண்டும் என்கிற இதயத்தின் வாஞ்சையா?

## பிலிப்பியர் 3: 2-3

2. நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

3. ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்.

## யோவான் 17: 15-19

15. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

16. நான் உலகத்தானனல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல.

17. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.

18. நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.

19. அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.

### உற்றுநோக்கு

ஒரு தேவனுடைய பிள்ளையின் வாழ்க்கையில் சத்தியம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? நமக்கு நாமே உண்மையாய் இருப்பது - ஒருவரோடு ஒருவர் அன்பிலே உண்மையைப் பேசுவது - உண்மையாய் நடப்பது தீவிரமாய் சத்தியத்திற்காகவும், விசுவாசத்திற்காகவும் போராடுவதில்? உண்மையோடு தேவனை ஆராதிப்பதில்?

**தலைவர்:** யோவா 17: 15-19 வாசிக்கவும். கெத்சமனேக்கு போகிறதற்கு முன்பே, மேல் வீட்டு அறையில் இயேசு செய்த ஜெபத்தின் ஒரு பகுதி இது. உலகத்தின் பாவங்களை தீர்க்கிற தேவ ஆட்டு குட்டியாக அவருடைய கடைசி வேளை வந்து விட்டது. இப்போது அவருடைய கரிசனை எல்லாம் அவர் நாமத்திலே விசுவாசிக்கிறவர்களைப்பற்றியே.

- பரிசுத்தமாக்கும் - என்ற வார்த்தைகளை இப்படி குறிக்கவும். 
- சத்தியம் என்று வருமிடங்களில் - கோடிட்டுக்கொள்ளவும்.

### கலந்துரையாடு

- சத்தியம் என்கிற குறிப்பிலிருந்து என்ன கற்றுக் கொள்ளுகிறீர்கள்?
- நாம் எப்படி பரிசுத்தமாக்கப்படுகிறோம் பரிசுத்தமாக்கப்பட்டோம், வேறுபிரிக்கப்பட்டோம். சுத்திகரிக்கப்பட்டோம்)?

- நீங்கள் கவனித்ததில் சத்தியம் எவ்வளவு முக்கியமானது?

- நீங்கள் தேவனை ஒழுங்காய் ஆராதிக்க சத்தியம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? உங்களால் சில உதாரணங்கள் கொடுக்க முடியுமா?

## உற்றுநோக்கு

**தலைவர்:** மாற் 7:6-9,13 வாசிக்கவும்

- ஜனங்கள் மற்றும் அதனுடைய இணைச்சொற்களாகிய அவர்கள், தங்கள், நீங்கள் போன்றவற்றை வட்டமிட்டு குறிக்கவும்

- ஆராதனை என்பதை குறிக்கவும்

- பாரம்பரியம் என்பதை 'பா' என்றுகுறிக்கவும்

- தேவனுடைய கட்டளை மற்றும் தேவனுடைய வார்த்தையை என்ற ஒவ்வொரு குறிப்பினையும் இப்படி அடையாளமிடவும்.



## கலந்துரையாடு

**தலைவர்:** மீண்டும் உண்மையான ஆராதனையின் முக்கியத்தை எடுத்துக்காட்டும் வண்ணமாக, குழவில் உள்ளவர்கள் கலந்துரையாடலை புரிந்துகொள்ளும் படி கேள்விகளை தெரிந்து எடுக்கவும்.

## மாற்கு 7: 6-9, 13

6. அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்றும்,

7. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதியிருக்கிறபிரகாரம், மாயக்காரராகிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான்.

8. நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டுவருகிறவர்களாய், கிண்ணங்களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்துவருகிறீர்கள் என்றார்.

9. பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது.

13.நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள். இதுபோலவே நீங்களும் மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்கள் என்று சொன்னார்.

- ஜனங்கள் என்ற குறிப்பிலிருந்து என்ன கற்று கொள்ளலாம்?
- பாரம்பரியம், வார்த்தை மற்றும் தேவனுடைய கட்டளை என்ற குறிப்பிலிருந்து என்ன தெரிந்து கொண்டீர்கள்?
- அவர்களுடைய தேவஆராதனை பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொள்ளலாம்?
- தேவனுடைய வார்த்தையை ஜனங்கள் எவ்வாறு குறைத்து மதிப்பிட்டார்கள்?
- இந்நாட்களில் இப்படிப்பட்ட காரியம் நடப்பதை காண்கிறீர்களா?
- இன்றைக்கு மக்கள் எதை நாடுகிறார்கள்? அவர்கள் எதிலே நோக்கமாய் இருக்கிறார்கள்? - உணர்ச்சிப்பூர்வமான, பரபரபூட்டுகிற, அனுபவத்தினால் பெற்ற சாட்சிகளினால் ஈர்க்கப்பட்டு, நவீன கவர்ச்சியான பிரசங்கங்களிலா அல்லது தெளிவான முறையான தேவனுடைய வார்த்தையிலா? ஏன் இப்படி இருக்கிறது? இந்த இரண்டும் மக்களது ஆராதனையை எப்படி பாதிக்கிறது?

- நீங்கள் ஆராதிக்கிற வழியை ஆராய்ந்து பார்த்து இருக்கிறீர்களா? பாடும் பாடல்கள், தேவனை ஜெபத்திலே அணுகும் முறை, உடை உடுத்துகிற முறை, ஜெபத்திலே கேட்கிற காரியங்கள், பிறரை நடத்துகிற முறை, நம்முடைய குணாதிசயங்கள்,வாழ்க்கை தரங்கள் - இது அனைத்தும் தேவனுடைய தன்மைக்கும், அவருடைய வார்த்தைக்கும் எதிராய் இருக்கிறதா? உண்மையான ஆராதனை வீரராய் இருப்பதற்கு மேற்கூறிய காரியங்கள் எவ்வளவு அவசியம்?

- நாம் உண்மையாய் தேவனை நம்முடைய பொது கூடுகையில் ஆராதிப்பதற்கு தேவனுடைய வார்த்தையின்படி உறுதியாய் நிற்பதற்கு நீங்கள் ஆயத்தமா?

## சுருக்கவுரை

நாம் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பதை தடுப்பதற்கு நம் ஆத்மாவின் எதிரி என்ன வேண்டுமானாலும் செய்வான். நீர் என்னை வணங்கினால் பூமியின் அனைத்து ராஜ்யங்களையும் கொடுப்பேன் என்று இயேசுவிடம் சொன்னான். (மத் 4 : 8-10)

தேவனுடைய மகத்துவத்தையும், நமக்கு ஈவாக கொடுக்கப்பட்ட இரட்சிப்பையும், நம் சொத்தும் சுகமும் மறக்கச்செய்யாதபடி, நாம் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். நாம் மறக்கும்போது இஸ்ரவேலரை போல இயந்தரமாகிவிடுவோம். உபாகமம் 6:10-15-ல் கடுமையாய் மோசேயால் எச்சரிக்கப்பட்டும், அவர்கள் உதடுகள் தேவனை ஆராதித்தது, இருதயமோ தூரமாய் இருந்தது.

இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டபோது, அவர் உபாகமத்தில் உள்ள பகுதியை சொன்னார். "அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்". (மத் 4: 10)

உண்மையான ஆராதனை வீரர்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பார்கள். இப்படிப்பட்ட ஜனங்களை தான் பிதாவானவர் தேடி கொண்டு இருக்கிறார். அவர்களில் நீங்களும் இருக்க வேண்டும். அவருடைய பரிசுத்தத்தின் அழகிலே, அவரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதியுங்கள். உங்களுடைய நடை, உடை, பாவனை, பேச்சு எல்லாமே நீங்கள் உண்மையாய், மெய்யான ஒரே தேவனை ஆராதிப்பவர் என்று சாட்சி கூறட்டும்.

*பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்*

*பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்.*

*கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார்,*

*ஆகையால் பூச்சக்கரம் அசையாதபடி உறுதிப்பட்டிருக்கும்*

அவர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார் என்று
ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள்.

வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி,

சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக.

நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக

அப்பொழுது கர்த்தருக்கு முன்பாக காட்டுவிருட்சங்களெல்லாம்
கெம்பீரிக்கும்.

அவர் வருகிறார்,

அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்,

அவர் பூலோகத்தை நீதியோடும்,

ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

**சங்கீதம் 96: 9-13**



## நீங்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிறீர்களா?

நாம் எல்லாரும் நம் நாட்களை யாரையோ, எதையோ ஆராதிக்க செலவிடுகிறோம். உங்கள் வாழ்க்கை எப்படி உள்ளது உங்கள் வார்த்தைகள், உங்கள் நடக்கைகள், உங்கள் முன்னுரிமைகள் ஆராதனையின் பொருளாக இருக்கிறதா?

ஒரு பரிசுத்தமான தேவனை ஆராதிப்பதே உங்கள் விருப்பமெனில், அவரை எப்படி ஒரு சரியான மனநிலை மற்றும் நோக்கத்துடன் அணுகுவது என்பது உங்களுக்கு தெரியவேண்டும். இந்த உதவிகரமான பாடத்தில் நீங்கள் வேதம் சொல்லுகிறபடி எப்படி, எப்பொழுது, மற்றும் எங்கு நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்வீர்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள். பழைய ஏற்பாட்டு ஆசரிப்பு கூடாரம் தேவ பிரசன்னத்திற்குள் நுழைவதற்கான முறை எப்படியென்று நீங்களாகவே கண்டுபிடிக்கும்போது, நீங்கள் வெறுமையான சடங்காச்சாரம் அல்லது ஆழமற்ற செய்கையிலிருந்து ஒரு உண்மையான ஆராதனையின் வாழ்க்கை முறைக்கு கடந்துவர ஆயத்தமாக்கப்படுவீர்கள்.

### ஒரு வாரத்தில் 40 நிமிடங்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றக்கூடும்

ப்ரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் இன்டர்நேஷனல் குழுவினரின் 40 நிமிட வேதபாட தொடரானது உங்களை முக்கியமான தலைப்புகளில் ஊக்கத்துடன் செயல்படவைக்கிறது. இந்த பகுத்தாராயும் முறை வழிகாட்டியானது, வீட்டுப்பாடங்கள் இல்லாமல் வெறும் ஆறு 40 நிமிடங்களில் பாடங்களை முடிக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது, நீங்களாகவே ஆராயும்படியும் தேவன் என்ன சொல்லுகிறார் மற்றும் எப்படி உங்கள் இன்றைய வாழ்க்கையில் செயல்படுத்தக்கூடும் என்றும் உங்களுக்கு உதவிடுகிறது. புத்தகத்தின் வலதுபுறத்தில் அதன் குறிப்பிட்ட வேத வசனங்களுடன் நடத்துபவரின் குறிப்புகளும் உள்ளது,சுயமாகக் கற்கும் ஒவ்வொரு பாடங்களும் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் சிறுகுழு கலந்துரையாடலுக்கும் ஒரு வல்லமையான மூலாதாரமாகும்.

**ப்ரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் இன்டர்நேஷனல்,** 1970 ல் ஜேக் மற்றும் கே ஆர்தரால் ஆரம்பிக்கப்பட்டது, இலட்சக்கனக்கான மக்கள் தேவனுடைய சத்தியத்தை சுயமாகவே கண்டுகொள்ள பயிற்றுவித்துள்ளார்கள். Precepts for Life என்ற ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் 94 மில்லியன் பார்வையாளர்களை உலகமுழுவதும் சந்தித்துள்ளார்கள். இதனுடன் வேதத்தை பகுத்தாராயும் பயிற்சி பயிலரங்குகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு குழுக்கள் அமெரிக்கா முழுதும் கொண்டுள்ளது. PMIஏறக்குறைய 150 நாடுகளில் வேதத்தை பகுத்தாராயும் பாடங்களை 70 மொழிகளில் மொழியாக்கமும் செய்துள்ளது.

COVER DESIGN: THE DESIGNWORKS GROUP